Registered as a Newspaper

88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு தில்லைநாதன்
PHYSICAL CHEMISTRY
(அவஸ்தைச் சமநிலை)
ஆரம்பம்: 05-03-88
Sat. 07.15 - 08.15
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

சஞ்சீவி
அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி
விலை ரூபா 2-50

88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு. தில்லைநாதன்
(Sat, Sun)
9 30 - 11 30
அசேதன இரசாயனம்
12 30 - பிணைப்புகள்
ஆரம்பம்:
05-03-1988 Sat.
New Master
Institute
B.M.C LANE, JAFFNA.

மலர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஹு மாசி மீ 22உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 15 (05-03 1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 01

# மட்டுநகரில் நேற்று ஊர்வலம் தடுப்பு!

## இந்திய அமைதிப்படை விதித்த தடை உத்தரவால் ஈரோஸ் பேரணி சரிவர நடக்கவில்லை

கொழும்பு, மார்ச் 5

ஈரோஸ் இயக்கம் நேற்று மட்டக்களப்பில் நடத்த இருந்த பேரணி தடுத்து நிறுத்தப்பட்டது. அது திட்டமிடப்பட்டவாறு பூரணமாக நடத்தப்படவில்லை. சிறிதளவு தூரத்துக்கு மட்டுமே நடைபெற்றதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்திய அமைதிப் படையினர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் தடை விதித்ததன் காரணமாகவே ஈரோஸ் பேரணி சரிவர, திட்டமிட்டவாறு, பூரணமாக நடத்தப்பட வில்லை என்று அதே வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

நேற்றைய சம்பவம் குறித்து கிடைத்த விவரம் வருமாறு:-

மட்டக்களப்பில் நேற்று ஈரோஸ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு இந்திய அமைதிப்படையினர் தடைவிதித்தனர்.

மாமாங்கம் ஆலயத்தில் இருந்து ஈரோஸ் போராளிகள் ஊர்வலமாக மட்டக்களப்பு நகருக்குள் நுழைய முயற்சித்தபோ இந்திய அமைதிப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஐந்து பேர்களுக்கு மேல் ஒன்றுசேரக்கூடாது என்று இந்திய அமைதிப் படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

இந்திய அமைதிப்படையின் மட்டக்களப்புத் தளபதி கேர்ணல் முத்தண்ணா ஈரோஸ் போராளிகளைச் சந்தித்தார்.

ஊர்வலம், பேரணி நடத்தக்கூடாது மகஜரை எம்மிடம் தாருங்கள் பரிசிலனை செய்கின்றோம்- இப்படி கேர்ணல் முத்தண்ணா போராளிகளிடம் கூறி மகஜரைப் பெற்றுக் கொண்டார்.

மகஜரில் ஐந்து கோரிக்கைகள் கூறப்பட்டிருந்தன.

அவையாவன:-


★ பூசா மற்றும் அரசு சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவேண்டும்.

★ இலங்கை அரசின் ஊர்காவல் படை கலைக்கப்படவேண்டும்.

★ சிங்களக் குடியேற்றம் தமிழர் பகுதிகளில் இடம் பெறக் கூடாது.

★ மலையகத் தமிழருக்குப் பிரசா உரிமை வழங்

(10ஆம் பக்கம் பார்க்க)



எக்காலத்துக்கும் பொருந்தும் அறநூல் தந்த வள்ளுவர் பெருமானின் குருபூசை இன்றாகும்.

அவரது சிறப்பு தேசத் தமிழகத்தில் வள்ளுவர் கோட்டம் ஒன்று கம்பீரமாக எழுந்து நிற்கிறது. அதன் முப்பரிமாணச் சித்திரத்திலும், வள்ளுவர் திருவுருவத்தை அருகிலும் இங்கே தருகின்றோம்.

(8 ஆம் பக்கத்தில் சிறப்பு கட்டுரையைப் படியுங்கள்)

## கருத்துக் கலசம்

மயூரா

### அன்பும் அறனும்

நெஞ்சில் அறமிருந்தால் நடத்தையில் அழகிருக்கும்.

நடத்தையில் அழகிருந்தால் இல்லத்தில் இசைவிருக்கும்.

இல்லத்தில் இசைவிருந்தால் தேசத்தில் ஒழுங்கு வரும்.

தேசத்தில் ஒழுங்கிருந்தால் உலகெங்கும் அமைதி வரும்.

இவை அண்ணல் காந்தி அடிகள் அருளிய தத்துவ மொழிகள்.

உலகம் இன்று உள்ள அமைதியற்ற நிலையில்-

எமது தேசம் இன்றுள்ள அமைதியற்ற, ஒழுங்கற்ற, சீரற்ற நிலையில் —

எமது இல்லங்கள் இன்றிருக்கும் இசைவற்ற நிலையில் —

மகாத்மா காந்தி சொன்ன, நடத்தையில் அழகும், நெஞ்சில் அறமும் மூலதாரத் தேவைகளாகும்.

உலகம் அமைதியற்று அலைகிறது எந்த நேரத்திலும் உலக யுத்தம் மூளலாம் என்றிருந்த நிலை ஓரளவு தணிந்தாலும், உலகின் பல பாகங்களிலும் யுத்த பீதி தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

அரசியல் பிரச்சினைகள், வன்செயல்கள், அநியாயச் சாவுகள், அச்சத்துடன் கூடிய நிம்மதி இல்லா வாழ்க்கை என்பன தேசத்துக்குத் தேசம் வழமை நடைமுறைகளாகிவிட்டன.

சனநாயகம் சரிவர இயங்க முடியாமல் சமூக நீதியும், சமூக மதிப்புகளும், பண்புகளும் குன்றி அடாவடித்தனங்களும், அட்டூழியங்களும் பெருகி மக்கள் கல்லோ லகல்லோலமுற்று ஆற்றாது அழுது அல்லல் உற்றுக் கண்ணீர் மல்குகிறார்கள்.

எங்கள் நாடும், எங்கள் பிரதேசங்களும் இதற்கு விதிவிலக்கானவை அல்ல.

இப்போதைய நிச்சயமற்ற நிம்மதியற்ற பஞ்சஞ்சலமான பீதிய வாழ்க்கை அகல வேண்டுமானால், நிச்சயம் ஒவ்வொருவர் நெஞ்சிலும் அறம் வளர வேண்டும்.

அந்த அறம் வளர்ந்து தனிமனிதவாழ்வு சீராகும், நேராகும். இல்லங்களில் இசைவிருக்கும் தேசத்துக்குத் தேசம் ஒழுங்கு வரும். உலகம் எங்கும் அமைதி பிறக்கும்.

எனவே நாமும், வீடும், தேசமும், உலகமும் அமைதியையும் சமாதான சகவாழ்வையும், நிம்மதியையும் அடைய வேண்டுமெனின் —

சீரும் சிறப்பும் பெற வேண்டுமெனின்—

ஒருவர் இருவர் நெஞ்

(10-ம் பக்கம் பார்க்க)

## இன்று அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ் அன்னையர் முன்னணியினரின் அடையாள உண்ணாவிரதம் திட்டமிட்டபடி இன்று நடைபெறுகிறது

இதன்படி இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுகிறது

மட்டுநகரில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள அன்னையர் முன்னணியினருக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே இந்த அடையாள உண்ணாவிரதத்தை யாழ் அன்னையர் முன்னணி ஒழுங்கு செய்துள்ளது. (ஒ-9)

## இணைப்புக் குழு பூரண ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். அன்னையர் முன்னணியினர் இன்று சனிக்கிழமை நடத்த வுள்ள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமது பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குவதாக யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டில் சமாதானம் வேண்டி உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள மட்டுநகர் அன்னையர் முன்னணியினருக்கும் அவர்களுக்கு ஆதரவாக இன்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளும் யாழ். அன்னையர் முன்னணியினருக்கும் சகல பொது மக்களும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டும் என்றும் இணைப்புக் குழு கேட்டுள்ளது (ஒ-9)

## பல்கலை. மாணவரின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

கொழும்பு, மார்ச் 5

இந்திய அமைதிப் படையை வெளியேற்றக் கோரி தென் இலங்கையில் உள்ள ருகுணு பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திவரும் பகிஷ்கரிப்பு தொடர்ந்து ஐந்தாவது தினமாக வியாழக்கிழமையும் இடம் பெற்றது.

தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர் எஸ். வன்னிகம ஆகியவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி இவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக மொரட்டுவ பல்கலைக் கழக மாணவர்களும் கடந்த வியாழன் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (ஒ-எ)

### உண்ணாவிரதம்: ஒருவரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, மார்ச் 5

மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து வரும் அன்னையர்களில் ஒருவரான திருமதி அன்னம்மா டேவிட்டின் உடல் நிலை மோசமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது பதினொன்று தினங்களாக இவர் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து வருகிறார். [ஒ-எ]

### சுப நேரம்

05-03-1988
மாசி 22
சனிக்கிழமை
சுபநேரம்: 3 26 முதல் 4 56 வரை
ராகுகாலம்: 9 26முதல் 10-56 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

திருவள்ளுவர் குருபூசை

## சம்சாரம்— அது மின்சாரம். ...!

பீகிங், மார்ச் 4

சம்சாரம் அது மின்சாரம் - இது வெறும்சொற்றொடர் அல்ல.

உண்மையிலேயே கணவனின் உடலில் மின்சாரம்உற்பத்தியாகி மனைவியைத் தாக்கியது

இது நடந்ததுசீனாவில். இச் சம்பவத்தை ராய்ட்டர் சர்வதேச செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

சீனாவின் மேற்குப் பகுதியில் உள்ளது ஷின்ஜியாங் மாகாணம் அதன் தலைநகர்உருமகி. ஷாடிபோ, தொழிற்சாலையில் பணிபுரிபவர். இவருக்கு ஒரு நாள் அபூர்வமான உணர்வு உடலில் ஏற்பட்டது

மனைவியின் கூந்தலைத் தொட்டார் அவர். மனைவி தூக்கி எறியப்பட்டார்.

அப்போதுதான் தெரிந்தது கணவனின் உடலில் இருந்து மின்சாரம் வெளியேறிக கொண்டிருந்தது என்ற விஷயம்.

இரும்புப் பொருளைத் தொட்டால் கூடத்தாக்கும் அளவு மின்சாரம் அவரின் உடலில் இருந்து வெளியேறுவது பரிசோதனையில் கண்டுபிடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஆனைக்கோட்டையில் ஒரே குடும்பத்தில் நால்வருக்கு வாந்திபேதி

யாழ்ப்பாணம் மார்ச்5

ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள சாவற்காடு கிராமத்தில் எண்மர் வாந்திபேதியினால் பாதிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதில நல்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்,

மேலும் நெடுந்தீவுப் பகுதியில் வாந்திபேதி பூரணமாகக் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டதாகவும் கொழும்புத்துறை, குருநகர் பகுதிகளில் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிலிருந்து சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ராஜநாதன் நேற்று யாழ் நகருக்கு வருகைதந்து யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் வாந்திபேதி பரவியுள்ள கிராமங்களுக்குச் சென்று நிலைமையை அவதானித்தார். (ஒ-9)

### திருமலையில் அலுவலகங்கள் இயங்குகின்றன

திருமலையில உள்ள அரச அலுவலகங்கள் 17 நாள் இடைவெளியின் பின்னர் நேற்று இயங்கின.

வாரத்தில் இரண்டு தினங்கள் அலுவலகங்களைத் திறந்து வேலை செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அனுமதிக்கதைத்தொடர்ந்தே, ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர் என அறிவிக்கப் பட்டது. (ஒ-எ)

### ஆராய்வு

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தைப் பென்ஷன் திட்டமாக மாற்றுவது பற்றிய திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்படி அமைச்சரவை தொழில் அமைச்சர் பீ ஸி இம்புலனையைக் கேட்டுக் கொண்டது. (இ-எ)

## ★ செய்திச் சரம் ★

### பஞ்சாப்பில் 34 இந்துக்கள் சுட்டுக் கொலை

சண்டிகார், மார்ச் 5

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாத சந்தேக நபர்கள் சுட்டதில் 34 இந்துக்கள் உயிரிழந்தனர் 40 பேர் வரையில் படுகாயமடைந்தனர்

அமிர்தஸரஸில் இருந்து 100 மைல் தூரத்தில் உள்ள கோஷிபூர் கிராமத்தில் நேற்று இப்பயங்கரம் இடம் பெற்றது. (ஒ-எ)

### 9 பேரைக் காணவில்லையாம்

கொழும்பு, மார்ச் 5

திருகோணமலை, முள்ளிக்குளத்தில் நடந்த புதன் இரவு நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து ஒன்பது கிராம வாசிகள் காணாமற் போய் விட்டனர் என்று சொல்லப்படுகிறது. (ஒ-எ)

### விமானம் சிதறியது

பாரீஸ், மார்ச் 5

விமானம் ஒன்று ஓர்லியோ விமான நிலையத்தில் தரை இறங்க முயற்சித்தபோது மின்கம்பிகளில் சிக்கிமோதிவெடித்துச் சிதறியது

விமானத்தில் இருந்த 29 பயணிகளும் இவ் விபத்தில் உயிரிழந்தனர் (ஒ-எ)

### கிளிநொச்சியில் சென்றிகள்

கிளிநொச்சி, மார்ச் 5

கிளிநொச்சியின் முக்கியசந்திகளில் இந்திய அமைதிப் படையினர் இப்பொழுது "சென்றிகளை" அமைத்து நிலை கொண்டுளனர்.

சென்றிகளில் அடையாள அட்டைகள், கொண்டு செல்லும் பொருள்கள் என்பன சோதனை செய்யப்படுகின்றன. (ஒ-76)

### பெண்கள் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 5

திருகோணமலை, சம்பல்தீவுக் கிராமத்தில் நேற்றுப் பிற்பகல் இரண்டு பெண்கள், இனந்தெரியாத துப்பாக்கி மனிதர்களினால் சுட்டுக் கொலைப் பட்டனர்

திருகோணமலையில் உள்ள நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவரும் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலைப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது

அதே வேளை முதலிக்குளம் கிராமத்துக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தைத் தாக்குவதற்கு ஒரு கோஷ்டி முயற்சித்ததாகவும், அது முறியடிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது [அ-எ]

புதுமையும் எழிலும் ... பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ சின்னஞ்சிறு விளம்பரம் ✱

### தேவை

மர வியாபார மரம் அரிவு நிலையத்திற்கு கணக்காளர் தேவை. நடுத்தர வயதினர், முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. அண்மையில் வசிப்போருக்கு முன் உரிமை வழங்கப்படும். தேவி அரிவுத் தொழிற்சாலை, ஸ்தாபகர் அமரர் நா. செல்லையா சங்கானை.

தெல்லிப்பளை கிழக்கு துர்க்காதேவி ஆலயத்திற்கு அண்மையாக புகையிரதவீதி ஓரமாகப் புதிய சகல வசதிகளுமுள்ள 16½ வீடுவளவு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ஹோட்டல் ஞெலெக்ஸ், 340 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1625)

கிளிநொச்சியில் சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ்/ ஆங்கிலம்) வகுப்புகள் 1-04-88 இல் ஆரம்பமாகின்றன, பயில விரும்புபவர்கள் உடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். இப்பாடங்களைப் போதிக்கக் கூடிய உதவி ஆசிரியை தேவை. விண்ணப்பிக்கவும் இயக்குனர் 58, கணேசபுரம், கிளிநொச்சி. (1814)

UDUVIL GIRLS' COLLEGE
Wanted
Teachers to teach English Literature, Chemistry and Accounts in the G.C.E.Advanced Classes. A Teacher of Western Music Competent to teach Theory and Practicals for Piano-Forte. Apply before 15.3 88 Principal Uduvil Girls' College Chunnagam.

### விற்பனைக்கு

எம்மிடம் நல்ல இன சேவற்குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் எந்நேரமும் விநியோகிக்கப்படும். புறொயிலர் குஞ்சுகள் 4, 5ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். New No. 127, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (1798)

Uplands Farm Ltd, Kandy கோழிக்குஞ்சுகள் 16-03-88 புதன் கிழமை விநியோகிக்கப்படும். (Lohmann) பிறவுண் பேடு ரூ 12 50 (Lohmann) சேவல் ரூ 4 00 முன் கூட்டியே பதிவு செய்யவும் இல 9. சூராவத்தை ரோட் (கந்தையா லேன்) சுன்னாகம். (ஸ்டேசனுக்கு அருகாமையில்)

### காணவில்லை

எனது அடையாள அட்டை இலக்கம்: 2916*1297V தவறிப் போய்விட்டது கண்டு எடுத்தவர் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்
C.B. ANTONY, நாரந்தனை. (அரசாங்க மிருக வைத்தியர் பகுதி) (1802)

### உணவு

Welcomes you to Hotel de Galaxy (Unavagam) (சைவ உணவகம்) நகரின் மத்தியிலே சுவையான மதிய, இரவு உணவு வகைகளை அருந்த நாடுங்கள்—Galaxy No.30 கன்னாதிட்டிறோட் (சிவன்கோவில்முன்பாக) யாழ்ப்பாணம். We Look after you Better (1793)

### சேவை

கட்டிங், பிளவர் மேக்கிங், ஐஸிங், டெயர்ஸ்டைல் மிகச் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். M. ராணி. 426/1, இல்லர் லேன், யாழ்ப்பாணம்.

உங்கள் மணப்பெண்ணை இந்திய மணப்பெண் போல் அலங்கரிக்கவும், திருமண வைபவங்களுக்கான திருமண கேக், பிறந்தநாள் கேக், மேலைநாட்டு, கீழ்நாட்டு சிற்றுண்டி வகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ள M. ராணி, 426/1, இல்லர் லேன், யாழ்ப்பாணம்.

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலமாகக் கழுவிப் பிரிண்டிங் செய்வதற்கும், மீண்டும் 24 மணித்தியால சேவை செய்வதற்கும் தொடர்பு கொள்ளவும்: குயிக் ஸ்ராார், 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே எமது சேவை. எல்லா அளவுகளிலான நேர்த்தியான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும் சகல வகையான ரோனியோ வேலைகளுக்கும் உங்களுக்குத் தேவையான தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும் என்றும் எப்பெ முதும் கிளின்,239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கம்பியூட்டர் கல்வி

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன ஆரம்பம்: 7-03-88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உப தபாற் கந்தோர் அருகாமை)

### வகுப்புகள்

க.பொ.த. (உ.த) தூயகணிதம் பிரயோககணிதம் ஆரம்பமாகின்றது, கிழமை நாட்கள், ஞாயிறு காலை, மாலை வகுப்புகள் 1988, 1989 பரீட்சைப் பிரிவுகளுக்கான அட்சரகணிதம், நிலையியல் ஆரம்பமாகின்றது பிரபல கல்லூரி ஆசிரியரும் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் கணித விரிவுரையாளரும் போதனை செய்வார். இடம்: Shamrock Academy, சுண்டிக்குளி யாழ்ப்பாணம், (1776)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் பயிற்சி (Basic) பயிற்சிக் காலம் 40 நாள் கட்டணம்; 750/- மாத்திரம் ஆரம்பம்: 7-3-88. O/L படித்த இருபாலாரும் சேரலாம் சான்றிதழ் வழங்கப்படும் Unikco Computer Centre, No 5, மின்சார நிலைய வீதி, 2 ஆவது ஒழுங்கை யாழ்ப்பாணம். (உப தபாற் கந்தோர் அருகாமை.)

### புத்தகம்

தாவரபோசன சமையல் - புஷ்பாஞ்ஜலி முருகேசபிள்ளை- திருத்திய பதிப்பு விலை ரூபா 120/- வெளிநாட்டில் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சமையல் செய்வதற்கு அரியதோர் நூல் விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1692)

FURTHER EDUCATION PROGRAMME
UDUVIL GIRLS' COLLEGE

பயிற்சி நெறிகள்

1. Data Processing & Computer Programmimg.
2. Word Processing (LONDON)
3 Stenography (LONDON)
4 English (National Certificate Examination London - Sri Lanka)
5 Home Economics

மாணவியருக்கு விடுதி வசதியுண்டு.
விண்ணப்பமுடிவு 15 3 88
ஆரம்பம் 21-3 88

Miss. R. J Mann
Directress

பாடசாலை மாணவர்களுக்கு
பாடசாலை (B) பாக்
25 மில்க்வைற் சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

பாடசாலை மாணவர்களுக்கு
உலகப்படம்
இலங்கைப்படம்
10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொளளவும்.

## பட்டப் படிப்புகள் கல்லூரி

கல்வியாண்டு 1988 / 89

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள்.

✱ கலைமாணி B.A.
✱ விஞ்ஞானமாணி B.Sc.
(புள்ளி விபரவியல்)

க.பொ.த. உயர் தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

மாணவர்களை அனுமதித்தல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 10 3 88 ஆந்திகதிக்குப் பின்னர் எந்தவொரு மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டா தென்பதை மாணவர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனம் யாழ்நகரில் இதுவே. (1626)

## University of Jaffna
## TENDER NOTICE

Tenders are invited from Qualified contractors to construct a 'COLD ROOM' at Faculty of Medicine, University of Jaffna.

Tender forms may be obtained from the Works Engineer University of Jaffna on payment of Rs. 200/ until 15. 03 1988

Technical details and clarifications (if any) can be obtained from our consultants M/S Thurairajah Associates, 305, Main Street, Jaffna.

Tenders should be received on or before 31. 03. 1988 at 10.00 a. m.

The Tender Board of the University of Jaffna reserves the right to reject any tender without giving any reason.

REGISTRAR
University of Jaffna.

## DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சி நெறியில்
டிப்ளோமா

8 ஆம் பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. எமது விசேட தகைமைகள்.

இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், இலங்கை அரசாங்க தகுதி பெற்ற தாதிமாரும் மருந்தாளர்களும் அடங்கிய விரிவுரையாளர் குழு.

உங்கள் பதிவுகளுக்கு

North Ceylon Technical Institute
14. சென் பீற்றர்ஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனை

பயணிகள் செல்லும் "ரோயோரா கயஸ்" மோட்டார் ரதம் (mini bus) 30ஸ்ரீ 5132 விற்பனைக்கு உண்டு. ஓடக்கூடிய நிலையில் உள்ளது. என்ஜின் திருத்தி அமைக்கப்பட்டு புது நிலையில் உள்ளது. புத்தம்புதிய பற்றறி, வாங்க விரும்புவோர் பதிவுத் தபால் மூலமோ அல்லது இக் காரியாலயத்தில் நேரில் கடிதம் கொடுத்தோ தமது விண்ணப்பத்தை 19-03-88 மாலை 4 மணிக்கு எமக்குக் கிடைக்கத் தக்கதாக விண்ணப்பிக்கவும். வாகனத்தைப் பார்க்க விரும்பின் முன் அறிவித்தலுடன் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிக்கு முன் வண்ணார் பண்ணை, ஐயனார் கோவில் வீதியிலுள்ள வண்ணை மேற்குக் கிளினிக்கில் பார்வையிடலாம்.

கௌரவ காரியதரிசி,
ஆளுநர் சபை,
வட இலங்கை மருத்துவக் கல்லூரி,
நிர்வாகக் கட்டிடம்,
164, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
6081

## Further Education Programme
Of
UDUVIL GIRLS' COLLEGE

பாலர் வகுப்பு ஆசிரிய பயிற்சி
[Pre-School Teacher Training]

உடுவில் மகளிர் கல்லூரி தொடர் கல்விப் பிரிவினால் நடத்தப்படும்
மேற்குறிப்பிட்ட ஓராண்டு பயிற்சி நெறி 21-3-88 ல் ஆரம்பமாகும்.
(க. பொ த [சாதாரண தரம்]) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறியில் சேரலாம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
பல்கலைக்கழக, ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர்கள் பகுதி நேர விரிவுரைகளை நடாத்துவார்கள். மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு.
பயில விரும்பும் மாணவிகள் 14-3-88 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் நேர்முகம் 19-3-88

Miss. R. T. MANN
Directress.

உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்.

பரி.பேதுரு ஆலய வாலிபர் ஒன்றியம்
நடாத்தும்

## விடிவை நோக்கி!!!
(நற்செய்தி நிகழ்ச்சி)

5-3-1988 சனிக்கிழமை
மாலை 3.00 முதல் 5-00 வரை
சுண்டிக்குளி
மகளிர் கல்லூரியில்
நடைபெறும்.

(நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோ. 14:6)
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

## JAFFNA ENGLISH ACADEMY
[A LUX IN TENEBRIS]

### TOEFL
A new batch commencing on 14th March.
Lectures on Mondays, Wednesdays 9 to 11 a m.
Duration: 3 Months
Course Fee: Rs. 250/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

### ● HIGHER ENGLISH COURSE: (a crash course)
An integrated approach to the study of English encompassing the important aspects of English language and literature
**The Syllabus Comprises the following:**
(a) Shakespeare's Romeo & Juliet (original text)
(b) Bernard Shaw's Arms And The Man (original text)
(c) Charles Dickens's Hard Times (original text)
(d) Essays and Letter Writing
(e) Precis and Comprehension
(f) Idioms and Proverbs
(g) Literary Criticism
(h) Poetry
(i) Vocabulary, Phonotics, Grammar etc. etc

Duration: 4 months
Commencement:- 5th March
Lectures on; Saturdays & Sundays 4-00 to 5-30 p m.
Course fee: Rs. 350/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

### ● SPOKEN ENGLISH: (a crash course)
வயது வந்தவர்களுக்கும்
உத்தியோகம் பார்ப்பவர்களுக்கும்
Lectures on Tuesdays & Thursdays 4-00 to 5-30 p. m.
Commencement: 15th March
Course fee: Rs. 150 - only
Lectures: KANDIAH NAVARENDRAN

Lack of knowledge of spoken English leads to tragic linguistic accidents. We'll help you to avoid them. Let not your future suffer owing to lack of spoken English. If you are ready for a move—take the first step in the right direction by coming to us.
9, றக்கா லேன்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## A.A.T
(தமிழ்மொழிமூலம்)

க.பொ.த (சாதாரணதரம்) மூன்று திறமைச் சித்தியுடன் க.பொ.த (உயர்தரம்)இரண்டு பாடங்களில் சித்தி
அல்லது
க.பொ.த(சாதாரணதரம்) ஆறுபாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனத்தில் ஐந்துவருட கணக்குப்பதிவாளர் பயிற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.
விபரங்களுக்கு
உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1626)


### நீத்தார் பட்டியல்

## திருமதி அரியட் செல்வமலர் குணரத்தினம்

திருமதி. குணரத்தினம் 2-3-1988 ல் காலமானார். இவர் முன்னாள் ஆசிரியர் (சென் ஜோன்ஸ் கல்லூரி) திரு. W T. குணரத்தினத்தின் அன்பு மனைவியும் மனோ (Brunei) நாதன் (Oman) நீலா (Australia) டாக்டர் டொரின் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வி கமலா, எல்மோ, லெஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜீவா, இயன், ஏமி ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (5-3-87) Assembly of God கச்சாய் வீதி, சாவகச்சேரியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
Dr. திருமதி டொரின் அரசரட்ணம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (1627)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாம்பியாவில் இரண்டாவது வலிமை மிக்கவர் ஒரு தமிழர்

1937 ஆம் ஆண்டு ஆறு வயதுப் பையனையும் அழைத்துக்கொண்டு ஒரு குடும்பம் திருப்பதி சென்றது.

ஆறு வயதுப்பையனால் நடக்கமுடியவில்லை. அவனைத் தூக்கிக் கொண்டு செல்ல கூலியாளன் ஒருவன் அமர்த்தப்பட்டான்.

தூக்கிச் செல்பவனைப் பையன் உன்னிப்பாகக் கவனித்தான்.

பிணத்தைத் தூக்கிச் செல்பவன் போல் அக் கூலியாள் அவன் கண்களுக்குத் தெரிய வந்தது. அழத்தொடங்கி விட்டான் பையன்.

''ஏன் அழுகிறாய்?—'' தந்தை கேட்டான்.

''தூக்கிச் செல்பவனின் தோள் எனது உடம்பில் பட்டு நான் கறுத்து விடுவேன்'' - இப்படி அழுகைக்கு மத்தியில் பையன் சொன்னான்.

தந்தை அமைதிப் படுத்தும் முன்னர் சிறுவன் தானாகவே அழுகையை நிறுத்தி அமைதியாகி விட்டான்.

அதிசயமாக இருந்தது பெற்றோர்களுக்கு. ஏதோ ஒருவித சக்தி அவனுக்குள் தோன்றியது. மயக்கமடைந்தான். பிரக்ஞை திரும்பியபின் அவன் சொன்னான்:

உருவமில்லாத, பாரமில்லாத ஒன்றாக இருப்பதை அப்போது உணர்ந்தேன்.

எனது ஆத்மா எங்கோ இழுக்கப்பட்டுக் கொண்டு போகப்பட்டது. ஆறுகள், மலைகள் இருக்கும் அதிசய இடம் ஒன்றுக்குக் கொண்டு போகப்பட்டேன். கறுப்பு நிறம் கொண்ட மக்கள் வாழும் இடமாக அது இருந்தது.

உயர்ந்த மனிதர் ஒருவர், கருணைப்பார்வையுடன் என்னைப்பார்த்து ''ஒரு நாள் நான் உனது சகோதரனாவேன்''- என்று சொன்னார்.

அவ்வளவு தான் பிரக்ஞை எனக்குத் திரும்பியது என்று சொன்ன ஆறு வயதுப் பையனைக் கூலியாள் திருப்பதிமலைக்கு தூக்கிச் சென்று இறக்கினான்.

பையன் சொன்னவை, குழந்தைப் பேச்சு என்று பெற்றோர்கள் தள்ளி வைத்து விட்டனர்.

பையனின் வாழ்க்கை பழைய மாதிரிச் சென்றது.

சித்தூரில் வாழ்ந்த அவன், வைத்திய சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் சேர்ந்து வைத்தியத்துறையில் பட்டம் பெற்றுத் தேறினார்.

அவர்தான் டாக்டர் எம். ஏ. ரங்கநாதன்.

ஆசிரியர் தொழில் அவருக்குப் பிடித்தது. 1953 இல் மெஸ்டன் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியரானார். பின்னர் இந்திய ரயில்வேயில் சேர்ந்து பணியாற்றினார்.

ராஜஸ்தானில் 20 ஆண்டுகள் பாடசாலை ஒன்றில் கணித ஆசிரியராகப் பணி புரிந்தார்.

வறுமை வாட்டியது. 1974 இல் பத்திரிகை விளம்பரம் ஒன்றைக் கண்டார்.

சாம்பியாவில் ஆசிரியர் வேலை இருக்கின்றது என்று அவ்விளம்பரம் கூறியது. விண்ணப்பித்தார்; தெரிவு செய்யப்பட்டார்.

சாம்பியாவில் சாம்பெஸி ஆற்றின் அருகே அமைந்திருக்கும் செனங்கா கிராமத்தில் அவருக்கு வேலை கிடைத்தது.

ஆறு வயதில் கண்ட கனவில் தென்பட்ட இடம் இதுதான் என்பது டாக்டர் ரங்கநாதனுக்குப் புரிய வெகுநேரம் எடுக்கவில்லை.

1976 இல் அவரின் கண்பார்வை மங்க ஆரம்பித்தது. இருள் தனது வாழ்வை அஸ்தமிக்கச் செய்யப்போகும் அபாயத்தை உணர்ந்த அவர், பதவியை ராஜினாமா செய்து விட்டு, இந்தியா திரும்ப முடிவு செய்து விட்டார்.

புறப்படுவதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்து விட்டார்.

திடீரென்று ஒருநாள் நண்பர் ஒருவர் அவர் தங்கியிருந்த இடத்துக்கு வந்தார்.

நண்பர் ஒருவரை வந்து பாருங்கள் இப்படி அவர் அழைத்தார். தயங்கியபடி சென்ற டாக்டர் ரங்கநாதனை, ஓர் உயர்ந்த மனிதர் முன்னால் கொண்டு போய் நிறுத்தினர், அந்த நண்பர்.



ஜனாதிபதி கவுண்டாவுடன் அவரின் அரசியல் ஆலோசகர் டாக்டர் ரங்கநாதன்

திருப்பதிக்கு ஆறு வயதில் சென்றபோது மயக்கத்தில் கண்ட அந்த உயர்ந்த மனிதர் தன் முன் உயிராக நிற்பதை டாக்டர் ரங்கநாதன் கண்டார்.

'நீர் எனது சகோதரன்; என்னுடன் இரும் நாம ஒன்றாகப் பணி புரிவோம்''—இப்படி அவர் சொன்னார், கடவுளின் எண்ணமும் இதுதான் என்று டாக்டர் ரங்கநாதன் ஏற்றுக்கொண்டார்.

முதல் சந்திப்பு 10-15 நிமிடங்களே நீடித்தது. பின்னர் அடுத்தடுத்துச் சந்தித்தனர்.

அந்த உயர்ந்த மனிதர்தான் சாம்பியாவின் ஜனாதிபதி கென்னத் கவுண்டா.

பிரிக்க முடியாதவர்களாகிவிட்டனர் திரு. கவுண்டாவும் டாக்டர் இரங்கநாதனும்.

இன்று சாம்பியாவின் இரண்டாவது வலிமை மிகுந்த மனிதராக டாக்டர் ரங்கநாதன் விளங்குகின்றார்.

முதலாவது வலிமை மிக்கவர் ஜனாதிபதி கென்னத் கவுண்டா ஆவார்.

திரு. கவுண்டாவின் வைத்தியர் மட்டுமல்ல; அந்தரங்க காரியதரிசியும் டாக்டர் ரங்கநாதனே.

கவுண்டாவின் நண்பராக, ஆத்மீக வழிகாட்டியாக, அரசியல் ஆலோசகராக டாக்டர் ரங்கநாதன் விளங்குகின்றார்.

சாம்பியாவுக்கு விஜயம் செய்யும் உலகத்தலைவர்கள்கூட டாக்டர் ரங்கநாதனைச் சந்திக்காமல் செல்வதில்லை.

அந்த அளவுக்கு தமிழரான டாக்டர் ரங்கநாதனின் புகழ் சாம்பியாவில் கொடி கட்டிப் பறக்கின்றது. ★

---

**பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்**

# சமஸ்கிருதம் உயிர் வாழ்கின்றது கன்னடத்தில் ஒரு கிராமத்தில்

சமஸ்கிருதம் இறந்து போன மொழிகளில் ஒன்றா?

இல்லை. ஒரு கிராமத்துக்கு உயிர் கொடுத்துக் கொண்டு இருக்கும் மொழியாக சமஸ்கிருதம் விளங்குகின்றது.

கர்நாடக மாநிலத்தில் சிமோகா பட்டினத்தில் இருந்து பத்துகிலோமீட்டர் தூரத்தில் உள்ளது மத்தூர் என்றொரு சிறிய கிராமம்.



இரண்டாயிரம் மக்கள் வரை அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

துங்கா நதிக்கரையோரத்தில் உள்ளது இந்த அழகிய கிராமம்.

அங்கு செல்பவர்களை 'ஹரி ஓம்' என்று சமஸ்கிருதத்தில் வரவேற்கின்றார்கள்.

'அகசத்து' என்று வீட்டினுள் அழைத்துச் செல்கின்றார்கள்.

தேவபாஷை அங்கு வீட்டுப் பாஷையாக சர்வசாதாரணமாகப் பேசப்படுகின்றது.

ஏனைய மொழிகளில் பேசுவது போல நாளாந்த வாழ்க்கையை சமஸ்கிருத மொழியிலே பேசி வாழ்ந்து வருகின்றனர், அக்கிராம மக்கள்.

அங்கவஸ்திரம் தரித்த சிறு குழந்தைகள், சமஸ்கிருத வகுப்புக்களுக்குச் செல்கின்றனர்.

கழனிகளுக்குச் செல்லும் விவசாயிகள் சமஸ்கிருதத்தில் உரையாடிக் கொண்டு செல்கிறார்கள்.

வீடுகளுக்கு வெளியே அறிவிப்புப்பலகை தொங்குகின்றது.

'குடியிருப்பவர்களுடன் சமஸ்கிருதத்தில் உரையாடலாம்' என்பதே அது.

வீட்டுத் தளபாடங்களுக்கும் சமஸ்கிருதப் பெயர்கள் உண்டு. குசினியில் உள்ள பொருள்களுக்கும் சமஸ்கிருத பாஷை உண்டு.

கடைகளுக்குச் செல்பவர்கள் சமஸ்கிருத மொழியில் பொருள்களை விசாரிக்கின்றார்கள். கடைக்காரரும் சமஸ்கிருதத்தில் பதிலளிக்கின்றார்.

சூரியன் அஸ்தமிக்கின்றது. துங்க நதிக்கரை மீதில் கிராமவாசிகள் கூடுகின்றனர். சந்தியாவந்தனம் ஆரம்பமாகின்றது.

பெரிய ஆலமரம் ஒன்றின் கீழ் பிராமணர்கள் கூடுகின்றனர். புராணங்கள், உபநிஷதங்கள், வேதங்கள் பற்றிச் சமஸ்கிருதத்தில் உரையாடுகின்றனர்.

வேதகாலத்தை நினைவூட்டுவது போல் மத்தூர்க் கிராமம் விளங்குகின்றது.

மத்தூர்க் கிராமம் விஜயநகர காலத்தைச் சேர்ந்தது. அந்தக் காலத்தில் இக் கிராமத்தின் பெயர் கிருஷ்ணராஜ்பூர் என்பது.

துங்க நதி பெருக்கெடுத்தபோது அக்கிராமம் மறைந்தது.

அழிந்த கிராமத்தை மக்கள் மீண்டும் புனரமைத்தனர். மத்தூர் என்று பெயரும் சூட்டப்பட்டது. கன்னடத்தில் 'மத்தூர்' என்பது 'மீண்டும் பட்டினம்' என்ற கருத்தைத் தருகின்றது.

'மீண்டும் பட்டினம்' மீண்டும் சமஸ்கிருதத்துக்குப் புத்துயிர் கொடுக்கின்றது என்று கூறலாம் அல்லவா! ★

---

# 30கோடி ரூபா செலவழித்தால் வெள்ளை மாளிகை செல்லலாம்

அடுத்த ஜனாதிபதியாக வர விரும்புகின்றீர்களா?

30 கோடி ரூபாவைச் செலவழிக்கத் தயாராக இருங்கள்!

இப்படி ஓர் அறிவிப்பு கூறுகின்றது.

திகைக்காதீர்கள். ஐந்து ஸ்டார் ஜனநாயகம் உள்ளதாகக் கூறப்படும் இலங்கையில் இருந்து இந்த அறிவிப்பு வெளிவரவில்லை.

மனித சுதந்திரம், உரிமை பற்றி எல்லாம் உலகுக்குப் போதிக்கும் அமெரிக்காவில் இருந்துதான் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பரில் நடைபெற உள்ளது.

கழுதைச் சின்னத்தைக் கொண்ட குடியரசுக்கட்சியின் சார்பில் வேட்பாளர் நியமனம் பெறும் பூர்வாங்கப் போட்டிகள் ஆரம்பமாகி விட்டன.

அதுபோல் யானைச் சின்னத்தைக் கொண்ட ஜனநாயகக் கட்சியின் டிக்கட்டைப் பெறும் போட்டியும் நடைபெறுகின்றது.

தற்போது ஜனாதிபதியாக இருப்பவர் முன்னாள் கௌபோய் நடிகர் றொனல்ட் றேகன். 40 ஆவது ஜனாதிபதி என்ற பெருமைக்கு உரியவர்.

இலங்கைப் பணத்தில் 21 கோடி ரூபா (70 மில்லியன் டாலர்) செலவழித்துத்தான் அவர் ஜனாதிபதி பதவியைப் பிடித்துக் கொண்டார்.

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஒரு கணிப்பு

1988 ஜனாதிபதித் தேர்தலுககான பல்லவி ஒன்று தான்.

எவர் அதிகம் செலவழிக்கின்றாரோ அவர் வெல்வார் — இதுதான் அந்தப் பல்லவி.

நூறுமில்லியன் டாலர் வைத்து இருப்பவரை வெற்றி தேடி வரும் என்று வால்ஸ்ரீட் ஜேர்னல் மதிப்பிட்டுள்ளது.

நூறுமில்லியன் டாலர் இலங்கைப் பணத்தில் சுமார் 30 கோடி ரூபா இத்தொகை, ஜோன் கென்னடி ஜனாதிபதித் தேர்தலில் செலவழித்த பணத்திலும் பார்க்க பத்து மடங்கு அதிகம்.

1984 தேர்தலில் வெற்றி பெற றேகன் செலவழித்த பணத்திலும் பார்க்க மூப்பது மில்லியன் டாலர் அதிகம்.

இம்முறை குடியரசுக் கட்சி அரசியல்வாதிகள் தான் பண விஷயத்தில் அதிர்ஷ்டசாலிகளாக உள்ளனர் என்று வால்ஸ்ரீட் ஜேர்னல் கூறுகின்றது.

ஜனாதிபதி தேர்தலில் குடியரசு டிக்கட்டுக்குப் போட்டியிடுபவர்களில் முன்னணியில் நிற்பவர்



றேகன்

உபஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் ஏற்கனவே 10 மில்லியன் டாலர் பணநதைத் திரட்டி வைத்திருக்கின்றார்.

ஜனநாயகக் கட்சி டிக்கட்டைக் கோரும் மஸசூசெட்ஸ் செனட்டர் மைக்கல் டுக்காகிஸ் வைத்திருக்கும் பணத்தைப் போல் இரண்டு மடங்கு புஷ்ஷிடம் உண்டு.

குடியரசுக்கட்சி டிக்கட் கேட்கும் இன்னொருவரான பட்றொபர்ட்ஸனும் மூன்று மில்லியன் டாலர் அளவில் திரட்டி வைத்திருக்கின்றார்.

ஆனால் சில வேட்பாளர்கள் கடனில் மூழ்கியிருக்கின்றனர். ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனம் கோரியவர் செனட்டர் ஹரி கார்ட். நடிகை டொன்னா ரைஸுடன் கொண்ட இரகசியத் தொடர்பு பகிரங்கமாகவே போட்டியிடுவதினின்றும் விலகிக் கொண்டார்.

இவர் 1984 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனம் கேட்டுப் போட்டியிட்டதால் கிடைத்த தோல்வியும் 3 மில்லியன் டாலர் கடனும்.

இந்த முறை அந்தக் கடனை அடைத்து விடலாம் என்று முயற்சித்தார். ஆனால் நடிகையின் தொடர்பு அதனைத் தவிடு பொடியாக்கி விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில போட்டியிடும் பல வேட்பாளர்கள் அரசியல் நடவடிக்கைக் குழுக்களை நியமித்திருக்கின்றனர். நிதி சேகரிப்பதே இக் குழுக்களின் வேலை

ஒரு தனிப்பட்டவர் ஆயிரம் டாலர் மட்டுமே தேர்தல் பிரசாரத்துக்கு நன்கொடையாக வழங்கலாம். ஆனால் ஆண்டு ஒன்றுக்கு அவர்கள் 5000 டாலரை அரசியல் நடவடிக்கைக் குழுவுக்கு வழங்கலாம்:

இப்படி அமெரிக்கத் தேர்தல் சட்டம் கூறுகின்றது.

உபஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் 1988 தேர்தல் பிரசாரத்துக்கு நிதி திரட்டும் வேலைகள் 30 பேருடன் முழு மூச்சாக இடம் பெறுகின்றனவாம்.

1988 தேர்தல் வேட்பாளர்கள் தங்களுக்கு எவ்வளவு நிதி கிடைத்தன என்பதைப் பிரகடனப்படுத்தியே ஆக வேண்டும்.

என்ன தான் இருப்பினும் ஒன்று மட்டும் நிச்சயமாகி விட்டது.

வெள்ளை மாளிகையில் ஓவல் வடிவமைப்புக் கொண்ட அலுவலகத்தில் அடுத்த ஜனவரியில் அமரப்போகும் 41 ஆவது ஜனாதிபதி, 100 மில்லியன் டாலரைச் செலவழித்தவராக இருப்பார் என்பதே அது. ★

---

# பயிரின் 'தாகத்தை' அறிந்து கொள்ள பெப்பிஸ்ரா உணர்ச்சி நரம்பு

தாவரங்கள் பழமரங்களுக்குத் தண்ணீர் தேவை.

எவ்வளவு தண்ணீர் தேவைப்படுகின்றது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

மரங்களைக் கேட்டுப் பார்த்து அறிந்து கொள்ளமுடியுமா?

மரத்துக்குள்ள 'தாகத்'தின் அளவைக் கண்டு பிடிக்க பிரெஞ்சு நாட்டில் இயந்திரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் முறையில் அமைக்கப்பட்ட அந்த இயந்திரத்துக்கு 'பெபிஸ்ரா' என்று பாதியாகக் குறைப்பதாக உள்ளது என்று உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

தாவரத்தின் 'தண்ணீர்த் தாகத்தை'க் கண்டுபிடிக்கும் இந்த எலக்ரோனிக் உணர்ச்சி நரம்புகளை தாவரங்களில் கட்டிவிட்டால்போதும், 'தாகத்தின் அளவு' தெரிந்துவிடும்!!

நான்கு 'பெபிஸ்ரா உணர்ச்சி நரம்பு' இயந்திரங்கள் போதும், மூன்று ஹெக்டேர் பயிர்களுக்குத் தேவையான நீரின் அளவை அறிந்து கொள்ள-



பெயர்.

பெப்பி (Pepi) என்பது பழைய பிரெஞ்சு வார்த்தை. அதன் கருத்து 'அதிக தாகம்' என்பது 'ஸ்ரா' என்பது ஒழுங்குபடுத்துவது.

[illegible] செய்கைக்குத் தேவை [illegible] நீரின் அளவைப் [illegible]

பெரிய அளவில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள், தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள் இதனைப் பயன்படுத்துகின்றன.

எட்டு உணர் [illegible] ளுடன் கூடிய 'பெப்பிஸ்ரா' [illegible] சந்தைக்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களின் நண்பர் கணிதமேதை ராமானுஜன்

இங்கிலாந்திலுள்ள மருத்துவமனையொன்றில் மிகுந்த சுகவீனத்துடன் தமிழகக் கணித மேதை இராமானுஜன் படுத்திருந்தார். அவர் உடல் வாடி வதங்கியிருந்தது. முகத்தில் மிகுந்த வேதனை தெரிந்தது. அப்போது அவரைப் பார்க்க வந்த கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் ஜி எச். ஹார்டி அவர்கள் அவரின் நலம் பற்றி விசாரித்தார். பின்பு பேராசிரியர் ஹார்டி அவர்கள், 'யான் வந்த டாக்சியின் எண் 1729. அதனை 7×13×19 என்ற பெருக்கமாகக் காட்டலாம். வேறு சிறப்பொன்றும் அந்த எண்ணிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அது ஓர் அபசகுனமான எண்ணாக இருக்காதென நம்புகின்றேன்' என்றார்.

நோயின் வேதனை நிரம்பிய இராமானுஜனின் முகத்தில் ஓர் ஒளி பரவியது.

உடனடியாகவே அவர் 'நீங்கள் நினைப்பது சரியல்ல. அது வெகு சிறப்பான எண். இரு கனங்களின் கூட்டுத்தொகையாக இருவேறுவகையில் ($1729=10^3+9^3=12^3+1^3$) காட்டக்கூடிய மிகச் சிறிய எண் 1729 ஆகும்' என்றார்.

பேராசிரியர் அவரை மிகுந்த வியப்புடன் நோக்கி 'அத்தகைய சிறப்புப் பொருந்திய நான்காம் அடுக்கின் கூட்டுத்தொகையாக அமையும் எண்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்.

சிறிது சிந்தனையின்பின் இராமானுஜன் 'அதற்கான வெளிப்படையான உதாரணத்தை உடனடியாகக் கூறமுடியாமலிருக்கிறது ஆனால் அது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்' என்றார்.

இராமானுஜனின் கருத்து மிகச்சரியானது. முன்பே லியானர்ட் ஓய்லர் கண்டுபிடித்த அத்தகைய எண் 9 இலக்கங்கள் கொண்டது. அதாவது $635318657=59^4+158^4=133^4+134^4$ என்பதாகும்.

மிகக் கடுமையான நோயினால் வேதனைப்பட்டு மரணப்படுக்கையில் இருக்கும்போதும் உற்சாகத்துடனும் உடனடியாகவும் எண்களின் இயல்புபற்றிக் கூறக்கூடிய திறமையும் சிறப்பும் பொருந்தியவரே இராமானுஜன். எல்லா எண்களினதும் இயல்புகள் பற்றியும் விசித்திரமான முறையில் அவர் தெரிந்து வைத்திருந்தார். இதனாலேயே பேராசிரியர் ஜோன் ஈலிட்டில்வூட் (Prof J. E. Littlewood) அவர்கள், 'ஒவ்வொரு நேர் எண்ணும் இராமானுஜனின் தனிப்பட்ட நண்பர்கள்' என்று வியந்து போற்றியுள்ளார்.

'இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கணிதமேதை இராமானுஜனே' என்று பாராட்டினார் சேர் யூலியன் ஹக்ஸ்லி. 'இந்தியாவில் கணிதம் பற்றி சிந்திக்கையில் அண்மைக் காலத்தவரான ஸ்ரீனிவாச இராமானுஜன் விதிவிலக்கானசிறப்புடையவர்' என ஜவகர்லால் நேரு தமது 'Discovery of India' என்ற நூலில் குறித்துள்ளார்.

'எனது உறுதியான கருத்துப்படி அண்மைக் காலத்தில் இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த அறிவியல் மேதை இராமானுஜனே' என்பது நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி டாக்டர் எஸ் சந்திரசேகர் அவர்களின் கருத்தாகும்.

''கணிதர்களின் கணிதர்'' (Mathematicians' Mathematician) என்று மேல் நாட்டினரால் போற்றப்பட்ட இராமானுஜன் இளமைக்காலந்தொட்டே வறுமையுடனும் பின்பு அவரது மேதாவிலாசத்தைப் புரிந்து கொள்ள ஆற்றலற்ற சமூகத்தின் புறக்கணிப்புடனும் போராட வேண்டியிருந்தது இதனால் மேலும் சாதனை செய்யக்கூடிய இளமையிலேயே, 32 வயதிலேயே, மரணமடைய வேண்டி நேரிட்டது. எனவே இவருடைய வரலாறு எதிர்நீச்சலும் போராட்டமும் மிகுந்தது. கணித வரலாற்றில் இவரின் வாழ்க்கை ஒரு புதுமை நிறைந்த சோக காவியம் எனப் பேசப்படுகிறது. அதனால் கணிதத்தில் நாட்டமற்றவர்க்கும் பயன்படக்கூடிய பண்பு நலன்கள் நிறைந்த அவருடைய வாழ்க்கை அவருடைய நூற்றாண்டுவிழா காலத்தில் பார்ப்போம்.

இவருடைய முழுப்பெயர் ஸ்ரீவாசஐயங்கார் இராமானுஜன் ஐயங்கார் என்பதாகும். எனினும் பிற்காலத்தில் இவர் ஸ்ரீனிவாச இராமானுஜன் என்றே பெரும்பாலும் அழைக்கப்பட்டார். இவர் ஈரோட்டிலுள்ள அவருடைய தாய்வழிப் பாட்டனாரின் இல்லத்தில் சர்வசித்து வருடம் மார்கழி மாதம் 9ம் திகதிக்குச் சமனான 22 டிசெம்பர் 1887 இல் பிறந்தார். அவருடைய தந்தையார் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்தைச் சேர்ந்தவர். தந்தை ஸ்ரீனிவாச ஐயங்கார் கும்பகோணத்தில் ஒரு புடைவைக் கடையில் கணக்குப் பிள்ளையாக இருந்தார். இவருடைய பாட்டனாரும் கணக்குப் பிள்ளையாகவே தொழில் புரிந்தவர். இவரின் தாயாரின் தந்தை

**- சு. மகாலிங்கம் -**

ஈரோடு முன்சிப் நீதிமன்றில் பணிபுரிந்தவர். தாயார் கோமளத்தம்பாள் மிகுந்த சமய ஈடுபாடும் கடவுள் பக்தியும் நிரம்பியவர்.

இராமானுஜத்தின் பிறப்புப்பற்றிக் கூறப்படும் கதை கவனிக்கத்தக்கது. இராமானுஜன் பெற்றோருக்கு மூத்த பிள்ளை திருமணமாகி பல ஆண்டுகளாகியும் பெற்றோருக்கு பிள்ளைப் பேறின்மை காரணமாக மிகுந்த கவலை குடும்பத்தில் நிலவியது. தாயார் மிகுந்த வேதனைப்பட்டார். தாயாரின் தகப்பனார் மகளின் கவலையை அறிந்து சோதிடர்களைக் கலந்தாலோசித்தார். அவர்களுடைய ஆலோசனையின்பேரில் நாமக்கல்லில் உள்ள நாமகிரி அம்மனை விசேடமாக வழிபட்டனர். அந்த வழிபாட்டின் பயனாக நாமகிரி அம்மனின் அருளால் பிறந்த குழந்தையே இராமானுஜன் ஆவார். இதனால் அந்தக் குடும்பத்தினர்க்கு நாமகிரி அம்மனின் பால் விசேட பக்தி பூண்டது. இராமானுஜனும் தமது தாயாரைப் பின்பற்றி நாமகிரி அம்மனிடம் மிகுந்த பக்திகொண்டவராக இருந்தார். பிற்காலத்தில தமக்கு நாமகிரி அம்மனே கனவில் தோன்றி பல கணித வாய்ப்பாடுகளையும் சூத்திரங்களையும் தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார்.

பிள்ளைப்பருவத்திலேயே இவர் மிகுந்த அமைதியான போக்குடையவர். எப்போதும் சிந்தனையில் மூழ்கி விடுபவராக இருந்தமையினால் தனிமையில் நாட்டம்கொண்டவராக இருந்தார். அவருடைய வயதோடு ஒத்தபிள்ளைகளுடன் சேர்ந்து வெளியில் திரியவோ விளையாடவோ அவர் விரும்பவில்லை. பெற்றோர்களும் அவர் கண்டவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றித் திரிந்து பழுதாகிப்போய் விடுவாரென எண்ணி அவரை வீட்டிலேயே மறித்துவைத்தனர். எனினும் தாயாரிடமிருந்து தோத்திரப் பாடல்களையும் புராணக் கதைகளையும் கேட்டறிந்தார். காலம்செல்ல புராண நூல்களையும் பக்திக் கதைகளையும்தாமாகவே வாசிக்கத்தொடங்கினார். பலவற்றை மனப்பாடம் செய்தும் வைத்திருந்தார். வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், திருமுறைகள், இராமாயணம், பாரதம் போன்றவற்றிலிருந்து சுலோகங்களையும் பாடல்களையும் இலகுவாக ஒப்புவிக்கக்கூடியவராக இருந்தார். இவருடைய ஞாபகசக்தி அபாரமானது. பிற்காலத்தில் இவரது மேதைத்தன்மைக்கு இவரின் அற்புதமான ஞாபகசக்தியும் காரணமெனப் பலர் பாராட்டியுள்ளனர்.

அவருடைய தகப்பனார் இராமானுஜனை 1892 இல், 5ஆம் வயதில், கும்பகோணத்திலுள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். அங்கு அவருக்கு தமிழ் எழுத்துக்களும் ஆரம்ப எண்ணறிவும் கற்பிக்கப்பட்டது. பள்ளியிலிருக்கும் போது அவர் அடிக்கடி வானத்தைப் பார்த்துவிட்டு நட்சத்திரங்கள், அவற்றின் பருமன் பற்றி தம் ஆசிரியர்களிடம் பல நுட்பமான கேள்விகள் கேட்டு திணறவைப்பார். ஏனைய மாணவர்கள் தமது வகுப்புத்தோழரின் தனியானபோக்கினைக் கண்டு வியப்பர். தமக்குத் தெரியாத கணக்குகளை அவரிடமே கேட்டு அறிந்துகொள்வர். கணக்குகளைச்செய்வதில் ஈடுபட்டால் இராமானுஜன் அதில் மூழ்கி விடுவார். தமக்கோ அல்லது தமக்கு அருகிலோ என்ன நடக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளமுடியாதபடி அவரின் மனம் அதில் ஆழ்ந்துவிடும். எனவே அத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றைய மணவர்கள் பல விஷமத்தனமான காரியங்களை அவருக்குச் செய்வதுண்டு. எனினும் அதற்காக அவர்களிடம் அவர் வெறுப்போ பகைமையோ காட்டுவது கிடையாது. அவரின் இந்த நல்ல இயல்பினால் சக மாணவர்களும் ஆசிரியர்களும் அவரிடம் பெருமதி புவைத்திருந்தனர். பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் பெற்றோர் அவரை வெளியே விடுவதில்லை. இதனால் அவரைக் காணவும் உரையாடவும் விருப்பிய மாணவர்கள் அவருடைய வீட்டில் வீதிப் பக்கமாகவிருந்த யன்னலூடாகவே அவருடன் பேசவேண்டியதாயிற்று. கணக்குகளையும் அங்ஙனமே கேட்டறிய வேண்டியதாயிற்று. மாணவர்கூட்டம் கூட்டமாகச்சென்று அவரிடம் உதவி பெற்றனர்.

(வளரும்)

## மன்னர்கள் பற்றி

உலகிலே நிறைகூடிய மன்னர் டொங்கோ என்னும் நாட்டை ஆண்டு வருகின்றார்.

உயரமான மன்னரும் இவரே. இவரின் பெயர் ரவ்பா அஹ்உ.

ஆறுஅடி மூன்று அங்குல உயரமான இவரின் நிறை 209.5 கிலோ கிராமாகும்.

★

உலகிலே நீண்ட காலமாக ஒரு நாட்டை ஆட்சி புரிபவர் என்ற பெருமை ஜப்பானிய மன்னருக்குத் தான் உண்டு.

மன்னர் ஹிரோஹிட்டோ 1901ஆம்ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி பிறந்தார்.

1926ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி இவர் மன்னரானார்.

25 வயதிலே மன்னரான இவர், 88 வயதிலும் மன்னராக விளங்குகின்றார்.

ஜப்பானிய மன்னர் பாரம்பரையிலே இவர் 124ஆவது வாரிசு ஆவர்.

## மெல்லியர் பற்றி

மெல்லியர்கள் ஒல்லியாவது நவீன கால பாஷன் அல்ல.

பிரெஞ்சு நாட்டில் 1519–1589 வரை அரசியாக இருந்த கதரீன்டீ மெடிஸி மெல்லியர்களின் இடை எவ்வளவு அங்குலங்களாக இருக்க வேண்டும் என்பது குறித்து ஆணை ஒன்றைப் பிறப்பித்திருந்தார்.

இடை 13 அங்குலங்களாக (முப்பத்துமூன்று சென்டிமீட்டர்) இருக்க வேண்டும் என்பதே அந்த ஆணை.

-ரத்தி-

# ஆய்ந்து பார்க்காமல் யாருக்கும் உதவக் கூடாது

சுகபோக வசதிகளில் நாட்டமுடைய ஒரு மன்னன் நிறைய செலவு செய்து தூய்மையும், மென்மையும் நிறைந்த அழகான பஞ்சணையொன்று தயார் செய்தான்.

பஞ்சணை தயார் செய்யப்பட்டபோது ஒரு பெண்சீலைப்பேன் அதில் எப்படியோ ஒட்டிக் கொண்டு பஞ்சணையோடு சேர்ந்து அரண்மனைப் படுக்கையறைக்கு வந்து சேர்ந்து விட்டது.

சீலைப்பேன் எளிதாக மற்றவர்கள் கண்களில் படுவதில்லையாதலால் அன்றாடம் பணியாளர்கள் பஞ்சணையைத் தட்டிச் சுத்தம் செய்யும் போதும் கூட அவர்கள் கண்களில் படாமல் மறைந்து நிரந்தரமாகப் பஞ்சணையிலேயே தங்கி விட்டது.

மன்னன் அயர்ந்து உறங்கும் சமயமெல்லாம் சீலைப்பேன் தன் மறைவிடத்தை விட்டுவெளிப்பட்டு வந்து அவன் உடலில் ஒட்டிக் கொண்டு இரத்தத்தைச் சுவைத்து உறுஞ்சிக் குடிக்கும்.

நல்ல உணவு உண்டு கொழு கொழுவென இருக்கும் மன்னரின் உடல் இரத்தத்தைக்கன் விருப்பம் போல உண்ணும் வாய்ப்பு அடிக்கடி கிட்டியதால் பெண்சீலைப்பேன் நன்கு கொழுத்து தளதளவென்ற உடலைப் பெற்று அழகாகக்காட்சியளித்தது.

ஒருநாள் தற்செயலாக ஒரு மூட்டைப்பூச்சி அந்தப் பஞ்சணையில் வந்து சேர்ந்தது.

பஞ்சணையின் அழகும், மென்மையும், அதிலிருந்து வீசும் நறு மணமும் மூட்டைப்பூச்சியின் மனத்திலே உல்லாச உவகை உணர்வை ஊட்டியது.

''ஆஹா, அற்புதமான இடத்துக்கு வந்து விட்டேன். சகல சுகபோகங்களுடன் வாழும் செழுமையான உடல்வாகு படைத்த மன்னனின் இரத்தத்தைக் குடித்து மகிழக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே இனி நான் இந்த இடத்திலேயே தங்கி சொர்க்க போகத்தை அனுபவிப்பேன்'' என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் தனக்குத் தானே கூறிக்கொண்டு உற்சாகத்துடன்பஞ்சணையில் இங்கு மங்குமாக ஓடித்திரிந்தது.

யாரோ ஒரு புது ஆள் பஞ்சணையில் உலா வருவதைக்கண்டு சீலைப்பேன் திகைப்புடன், அச்சமும் கொண்டது.

உடனே மூட்டைப் பூச்சியைப் பார்த்து, ''ஐயா, வரக் கூடாத இடத்திற்கு வந்திருக்கும் நீர் யார்? இங்கே எனக்கு மட்டும்தான் இருக்க உரிமையுண்டு. நான்மிகவும் சிறிய ஒரு ஜீவன். என்னால் மன்னருக்குப் பெரிய தொந்தரவுஏதும் நிகழவழியில்லை. நீரோ பெரிய ஜீவன். சட்டெனப் பிறர் கண்களில் நீர்பட்டுவிடக் கூடும். அப்போது நம் இருவருக்குமே ஆபத்து. ஆதலால் உடனடியாகஇந்த இடத்தை விட்டுப் போய் விடும்'' என்று கூறிற்று.

(வளரும்)




## வட்ட நிலா

வட்ட நிலா வா வா
  வண்ண நிலா வா வா
பட்டு நிலா வீசி வா
  பாடுகிறேன் ஆடி வா

ஓடி ஓடி நீயும் தான்
  ஒளித்து விளையாடுறாய்!
தேடித் தேடி நானும்மை
  நாடி ஓடி வருகிறேன்

தேய்ந்து தேய்ந்து போவ தேன்
  தேசம் பார்க்கப் போறியோ?
வளர்ந்து வளர்ந்து வந்துமே
  வர்ண ஜாலம் காட்டுறாய்!

வட்டமான முகத்திலே
  வடுவும் ஒன்று தெரியுதே
கிட்ட வந்தால் நானுமே
  கொஞ்சி விளையாடுவேன்

-- ஸ்ரீ. நிதர்ஸன்

# சாரணீயத்தின் தந்தை; பேடன் பவல் பிரபு

சிறுவர்களுக்கு விளையாட்டு என்றால் மிகவும் பிடிக்கும்.

இந்த விளையாட்டு உணர்வைப்பயன்படுத்தி சிறுவர்களைத் தன்னலமற்ற தேசபக்தியுள்ளவர்களாகஉருவாக்க முடியும் எனஆங்கிலேயரான பேடன் பவல் பிரபு கருதினார்.

இத்திட்டத்தை ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்கு இருபது சிறுவர்களைக் கொண்டமுகாம் ஒன்றை 1907 இல் பேடன் பவல் பிரபு நடத்தினார்.

இவ்வாறு கற்கும் மாணவர்களையே நாம் சாரணர்கள் என்கிறோம்.

1908 ஆம் ஆண்டு 'சிறுவர்களுக்கு சாரண இயக்கம்' என்னும் நூலை வெளியிட்டார்.

இந்த நூல் இன்று வரை சாரணர்களுக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது.

1908 இல் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது.

இயக்கத்தின் தந்தையான பேடன்பவல் பிரபு 22-02-1857 இல் இங்கிலாந்தில் பிறந்தார்.

பேடன் பவல் என்பவரின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்த இவர் தனது 19 ஆவது வயதில் இராணுவத்தில் சேர்ந்தார்.

இராணுவ சேவையில் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார்.

இளைப்பாறிய பின்னர் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார்.

சாரணர்களைச் சந்திப்பதற்காக 1915 ஆம் ஆண்டில் உலகச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

1920 இல் ஒலிம்பியாவில் முதலவது உலக சாரண ஜம்போறி நடைபெற்றது. ஜம்போறியின் கடைசி நாளான 06-08-1920 இல் உலகப் பிரதம சாரணராக பேடன்பவல் பிரபு பிரகடனஞ் செய்யப்பட்டார்.

1937 இல் பேடன் பவல் பிரபுவின் உடல் நலம் குன்றியது.

1941 இல் அவர் உலக வாழ்வை நீத்தார்.

இன்று பல்வேறு நாடுகளில் உள்ள சாரணர் அடங்கிய ''சர்வதேச சாரணர் நிறுவனம்'' ஒன்று இயங்கிவருகின்றது.

சாரணர்களாகிய நாம் இதனைக் கருத்துக்களை விரும்பி மதிப்போம்.

சமுதாயத்தில் ஏனையோருக்கு இடையூறாக இல்லாது, உதவியாக நாம் இருப்போம்.

இருளில் ஒளியைக் கொண்டுவர நாம்சிறந்த முன்னோடிகளாக ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்போம்.

அன்பு, பரிந்துணர்வு மூலம் சமாதானமும் மகிழ்ச்சியும் எங்கும் தழைக்கட்டும்.

### சாரணர்களே உங்களைத்தான்!

சாரணர்களே!
  உங்களைத்தான்
நான் அழைக்கிறேன்
  வருக வருக
சாரண இயக்கத்தில்
  சேரும் வழியை
நான்சொல்லிடுவேன்.

வாழ்க்கைக்கு
  வழி அமைக்க
இவ்வியக்கம்அமையுது
  சாரணர் புகழ்
ஓங்கிடவே
  இவ்வியக்கம்
சிறக்குது.

செ. தர்மன்
உருத்திரலிங்கம்,
(பாலமுனை/யாவான் கல்லூரி)

# ''லேட்டஸ் பாஷன்''


இப்போது மக்காகையுடன் (மக்காஸ்லீவ்) கூடிய தொழதொழா என்ற உடையையே ''பாஷன்'' என்று சொல்லி பெண்கள் எல்லாம் அணிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

எனவே இன்று இந்த ''மக்காஸ்லீவ்'' தொழதொழா சட்டை தைக்கும் 'புளக்' எடுப்பதற்கான அளவுகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

ஒரு சதுரத்தணியோ பேப்பரோ எடுத்து அதற்கு A, B, C, D என்று பெயரிடவும். A யில் இருந்து 3 அங்குலம் எடுத்து E எனக் குறிக்கவும்.

E யில் இருந்து B 14 அங்குலம். A யில் இருந்து $3\frac{1}{2}$ அங்குலம் F என்று குறிக்கவும். E ஐயும் F ஐயும் வளைவாக இணைக்க வருவதே கழுத்து ஆழமாகும்.

அடுத்ததாக B யில் இருந்து $7\frac{1}{2}$ அங்குலம் எடுத்து G எனக் குறிப்பிடவும். இது கையின் சுற்றளவாகும். A யில் இருந்து 8 அங்குலம் பதிய எடுத்து H எனக் குறிக்கவும், H இல் இருந்து 9 அங்குலம் எடுத்து I எனக் குறிப்பிடவும். I யில் இருந்து




J 14 அங்குலம். இது போல C யில் இருந்து 9 அங்குலம் எடுத்து J எனக் குறிப்பிட்டு G, I, J ஐப் பொருத்த வருவதே மக்காஸ்லீவுடன் கூடிய பக்கப் பொருத்தாகும். இப்போது நாம் எடுத்தது முன்பக்க 'புளக்'. இது போலவே பின்பக்க 'புளக்'கையும் எடுங்கள். ஆனால் கழுத்தின் ஆழம் A யில் இருந்து F 3 அங்குலம் எடுக்கவும்.

இனி பாவாடை எடுக்கும் முறை. A, B, C, D என்ற நீள்சதுரத்தணி எடுத்து A யில் இருந்து B 9 அங்குலம், C யில் இருந்து D 13 அங்குலம். சட்டையின் நீளம் H யில் இருந்து D 26 அங்குலம் இதுபோல பின்பக்க 'புளக்' கையும் எடுக்கவும்,

சட்டையைத் தைக்கும்போது மேல்சட்டையையும், பாவாடையையும் பொருத்தி இடுப்பில் 'எலாஸ்ரிக்' போட்டு இடுப்பின் அளவுக்கு உயர்த்தி சட்டையை நேர்த்தியாகப் போடவும்.

இங்கு தரப்பட்ட சட்டையின் அளவு சாதாரணமாக 16 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான அளவு முறையாகும்.




## தாயைப் பற்றி சில அறிஞர்கள்

சுவர்க்கம் என்பது தாயின் மடியில் உள்ளது.

- ரோபக்ஸ் -

ஒரு பெண்ணிற்கு அணிகலன் எது தெரியுமா? 'தாய்மை' தான் அது.

-மார்ட்டீன் லூதர்-

பிரான்ஸ் தன் நிலையிலிருந்து உயர நல்ல தாய்மார் சிலர் வேண்டும்.

-நெப்போலியன்-

'தாய்'! உலகத்தில் காணப்படும் ஓரேயொரு புனிதமான படைப்பு.

-கோல்ட்ரிஜ்-

தாயின் அன்பை வெளிவிட உலகத்தில் உள்ள எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.

-ரோபின்-

ஒரு தாயானவள் 100 குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். ஆனால் 100 குழந்தைகளால் ஒரு தாயைக் காப்பாற்ற முடியாது.

-யாரோ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவித்துளி

### அறிவுக்கு அன்னையவள்

சஞ்சீவிச்
சாரலிலே
சஞ்சரிக்கும்
இதயங்களே!
வஞ்சியென
சஞ்சிகையாள்
சஞ்சீவி
வருகின்ருள்!
எத்தனையோ
உள்ளங்கள்
நித்தம் நிதம்
எதிர்பார்த்த
சஞ்சீவி
முத்தாக
மலர்ந்திங்கு
நேற்றுவரை
தாமதித்து
நிறைவிதழாள்
விரைகின்ருள்.
அறிவுக்கு
அன்னையவள்
வருகின்ருள்
தரிசனமாய்.

- ராதா கோனேஸ்

### பணக் காதல்

ஆசையுடன்
முத்தமிட்டேன்
ஆஹா.........
சுவர்க்கம் தெரிந்தது
சுளீப் விழுந்தது
என்ருய்.
நீ
என் மீது
கொண்டது
உண்மையான
காதல் அல்ல
என்
பணத்தின் மீது
தான் உனக்குக்
காதல்!

- ஸ்ரீ

### யன்னல்

அடடே!
எங்கள் வீட்டில்தான்
யன்னல் என்று
பார்த்தேன்—
இப்போது
பெண்களின்
ரவிக்கையிலும்
யன்னல்தான்.

- ஸண்

### சேரிகளின் பாரி

சேரிகளின் பாரியே!
நீ -
செத்துவிட்டதாக
என்னால்
செப்பமுடியாது!
கண்ணீரின்
நினைப்பிலும்,
கவலையின்
அணைப்பிலும்
இருந்து,
நான் இன்று -
தப்பமுடியாது!
அன்பனே!
நீ -
எத்தனையோ
பேர்களுக்கு
உதவி
அளித்திருக்கிருய்!
அதனால் தான்—
என் இதயத்தில்
உனக்கு நான்
இடம்
அளித்திருக்கிறேன்!
ஈதல் என்பது,
உனக்கு -
இதயத்துடிப்பைப்
போல
இன்றியமையாதது!
நீ —
எண்ணற்ற
மனிதர்களின்
இதயங்களை
ஈர்த்தவன்!
மேன்மை
மிகுந்தவனே!
நீ -
மெரீனக்
கடற்கரையில்
சமாதி
கொண்டாலும்,
நமது -
மெல்லிய இதயங்கள்
தானே,
உன் கல்லறைகள்!
அதோ!
''காஞ்சித் தலைவன்''
அருகிலேயே,
நமது -
வாஞ்சைத்
தலைவனும்,
வந்து
சேர்ந்திருக்கிருன்!
வங்கமே
இப்போது
உன்னருகில் -
கலைச்சிங்கமும்,
தமிழ்ச்சிங்கமும்
கண்ணயர்ந்து
களிக்கின்றன!

ஜெ. கி. ஜெயசிலன்

# தமிழன் வீழ்ந்து விடாமல் வாழ அன்பு மான் தேவை; வஞ்சக மான் வேண்டாம்

சென்னை புதுக்கல்லூரியில் உமறுப் புலவர் தமிழ்ப்பேரவை விழா நடந்தது அப்போது தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சிறப்புரை ஆற்றினார். சென்னையில இருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி திரு. ந. வித்தியாதரன் அதனை இங்கு தொகுத்துத் தருகின்றார்.

திருச்சி வக்கீல்கள் சங்க விழாவில் நான் பேசும் போது 'மான்' பற்றி ஒரு இலக்கியக் கருத்தைச் சொன்னேன்.

நான் பேசியது அரசியல் அல்ல. ஆனால் பத்திரிகைகள் அரசியல் வர்ணம் பூசிச் செய்திகள் வெளியிட்டன.

கடும் வெயிலில் வாடிய பெண் மானுக்கு தன்னுடைய நிழலை இளைப்பாறும் இடமாகக் கொடுத்தது ஆண்மான்.

ஆனால் இன்றைய தினம் பெண்மான் நிழலில் ஆண் மான்கள் இளைப்பாற இடம் தேடுகின்றன என்று அன்று குறிப்பிட்டேன்.

அன்றைய தினம் ஒரு மான் பற்றி மட்டுமே கருத்துத் தெரிவித்தேன்.

இன்றைய தினம் மூன்று வகையான மான்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பெண் மானுக்கு இளைப்பாற இடம் கொடுத்தது, அன்பு மான். இது காதலின் நெருக்கம். இது இலக்கிய மான்.

இரண்டாவது வகையான மான் சீருப்புராணத்திலே வருகின்றது.

மூன்று மான்களை வேடன் விரட்டுகின்றான். அதில் ஆண் மானும் குட்டிமானும் தப்பி விடுகின்றது. பெண்மான் மட்டும் வேடனிடம் சிக்கி விடுகிறது. பிடித்து இழுத்து வரும்போது நபிகள் நாயகம் எதிரே வருகிறார். பெண்மான் வேடனைப் பார்த்து 'என்னை விட்டுவிடு' என்று கெஞ்சுகிறது. 'என்னைப்பிரிந்து ஆண்மான் ஆறுத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும். அது மாத்திரமல்ல. மூன்று நாள் கூட நிரம்பாத குட்டி மானுக்கு நான் பால் கொடுக்க வேண்டும். வேடனே என்னை விட்டுவிடு' என்று கெஞ்சுகிறது. 'விட முடியாது' என்று வேடன் மறுக்கிறான்.

நபிகள் நாயகம் குறுக்கிடுகிறார். 'உனக்கு இரக்கமே இல்லையா அப்பா? குட்டிக்கு பால் கொடுக்க வேண்டுமென்று அந்த மான் கெஞ்சுகிறதே. அதை விட்டுவிடு' என்கிறார். வேடன் முடியாது என்கிறான்.

பிறகு சொல்கிறார். 'அந்த மானை விடு, அது போய் மீண்டும் உன்னிடம் திரும்பி வந்துவிடும். குட்டிக்குபால் கொடுத்து விட்டு வந்து விடும்' என்கிறார். வேடன் நம்ப மறுக்கிறான். 'நீ நம்பவில்லை என்றால் அந்த மான் திரும்ப உன்னிடம் வருகின்ற வரை அதற்குப் பிணையாக ஜாமீனாக நான் உன் பக்கத்திலே இருக்கிறேன்' என்று நபிகள் நாயகம்சொல்கிறார்.

அதற்குப்பிறகு வேடன் அந்த மானை - 'நீ குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு உடனே வந்து விட வேண்டு'மென்று நிபந்தனை விதித்து அனுப்புகிறான். அந்தப் பெண் மான் தனது குட்டியைத் தேடி ஓடுகிறது. ஓடுகின்ற நேரத்திலேயே குட்டிக்குப் பால்கொடுக்கப் போகிறோம் என்ற பாச உணர்வால் வழியெல்லாம் பால் பொங்கி வழிகின்றது அது வெண்நிலவின் ஒளியைப்போல் இருக்கின்றது என்று உமறுப்புலவர் வர்ணிக்கின்றார்.

குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு பெண் மான் அண்ணலிடம் விடை பெறுகிறது. 'நான் மீண்டும் வேடனிடம் செல்ல வேண்டும். எனக்காக நபிகள் நாயகம் அங்கே ஜாமீன் இருக்கிறார்' என்று கூறுகின்றது காட்டுக்குச் சென்ற பெண் மானை திரும்பிச் செல்ல வேண்டாம் என்று எல்லா மான்களும் தடுக்கின்றன.

ஆனால் அந்தப் பெண் மான் குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டு, ஆண் மானிடம் விடைபெற்று விட்டு, நேராக வேடனிடம் திரும்பி வருகிறது உறுதிமொழியை விட்டு விட்டு வாழ்வதைவிட அடிபட்டுச்சாவதே மேல் என்று திரும்பி வருகிறது. இது நாணயமான மான். பெண் மானின் நாணயத்தைப் பார்த்த வேடன் மனம் இரங்கி அதை உயிருடன் வாழ வாழ்த்தி அனுப்புகிறான்.

அடுத்து - இதிகாசத்திலே ஒரு மான். நான் முதலில் இலக்கிய மானைச் சொன்னேன். அடுத்து புராண மானைச் சொன்னேன். இதிகாசத்திலே ஒரு மான். இதிகாசம்-ராமாயணம், அதிலே ஒரு மான், அந்த மான், ராமச்சந்திர மூர்த்தியையும் ஏமாற்றுகின்ற மான் (சிரிப்பு) (கைதட்டல்) மாரீச மான் அது. அந்த மாரீச மானைக் கண்டு சீதை மயங்குகிருள். அந்த மான் தனக்கு வேண்டும் என்று கேட்கிருள். அது மாய மான் என்பதை உணராத ராமச்சந்திர மூர்த்தி துரத்திக் கொண்டு செல்கிருர். (கை தட்டல்) வெகு தூரம் சென்ற பிறகு அவர் வீசிய கணையால் அந்த மாரீச மான் வீழ்கிறது. விழும்போது கூட சும்மா விழவில்லை. வேண்டுமென்றே 'லட்சுமணு! லட்சுமணு'' என்று உரக்கக் கூவிக் கொண்டே விழுகிறது. அப்படி லட்சுமணன் பெயரை உச்சரித்த காரணத்தால் ராமனுக்குத் தான் ஆபத்து ஏற்பட்டு விட்டதோ என்று ஜானகி பயந்து-(சிரிப்பு) - திருத்திக் கொள்க, சீதா தேவி பயந்து (சிரிப்பு) ராமாயணம் சொல்லிக் கொண்டிருக்கிறேன் (சிரிப்பு) நீ போய் 'வது அண்ணனைக் காப்பாற்று' என்று இலட்சுமணனை அங்கே விரைந்து விரட்டி அனுப்புகிருள். ஆக அங்கே வந்த மாரீச மான் அதனுடைய மாயையிலே ராமன் மயங்கி விட்ட காரணத்தால் - அதைப் புரிந்து கொள்ளாத காரணத்தால் - சீதையையே பறிகொடுக்க வேண்டிய நிலைமை ராமாயணத்திலே ஏற்பட்டது.



கருணாநிதி

மூன்று மான்களைக் கண்டோர்கள் ஒரு மான் காதல் மொழி தந்த மான். தன் துணைவியிடம் அன்பை பொழிந்த மான், இலக்கிய மான்; அன்பு மான்.

அடுத்தது நாணயத்துக்குப் பேர் போன மான் - சீருப்புராணத்திலே வருகின்ற மான்.

மூன்ருவது மாயமான். இதிகாசத்திலே வருகின்ற மான் வஞ்சக மான்- சூழ்ச்சி மான்.

இவற்றில் எது தேவை என்பதை நீங்களே சொல்லுங்கள்.

தமிழன் வீழ்ந்து விடாமல் காப்பாற்ற, அன்பு மான் - நாணய மான் நமக்குத் தேவை.

மாயமான் - சூழ்ச்சி மான், வஞ்சக மான் தமிழனுக்குத் தேவை இல்லை அது வேண்டவே வேண்டாம். ✲

# உலகம் அழியும் ஆருடம்; 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றும் விந்தை

1988 லீப் ஆண்டு. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் லீப் ஆண்டு வரும்.

இந்த ஆண்டில் பிறந்த எல்லோரும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் பிறந்தநாள் விழா வைக் கொண்டாடுவர்.

93 வயதான இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயும் சென்ற திங்கள் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

ஆனால் சோதிடர்களுக்கோ லீப் ஆண்டு பிறந்தவுடன் உலகின் அழிவு பற்றித் தான் கணிக்கவருகின்றது.

உலகம் முடிவுக்கு வந்துவிட்டது. இப்படி லீப் ஆண்டு பிறந்தவுடன் சோதிடர்கள் சொல்லத் தொடங்கிவிட்டனர் என்று மேலை நாட்டு தொடர்புச் சாதனங்கள் கூறுகின்றன.

ஆனால் அவர்களின் கணிப்பு இன்று வரை, பலிக்கவில்லை. இதை வாசிக்கும்போதும் உலகம் அழியவில்லை.

1984 இல் சினச் சோதிடர்கள் குழு ஒன்று கூடியது. ''பெப்ரவரி 29இல் உலகின் அழிவு நிச்சயம்; அதற்கான கிரகங்கள் ஒன்று கூடியுள்ளன''— இப்படி அந்தக் குழு கூறியது.

அதிஷ்டவசமாக 1988 பெப்ரவரி 29உம் வந்து போய்விட்டது.

அந்த ஆண்டு தான் சாய்ந்த பிஸா கோபுரம் மேலும் சிறிது சாய்ந்தது. உண்மையில் உலகின் அழிவு நெருங்கி விட்டதோஎன்று மக்கள் பயந்தனர்.

ரோம் நகரில் உள்ள சென் பீட்டர்ஸ் சதுக்கத்தை நோக்கி நூற்றுக்கணக்கானோர் படையெடுத்தனர்.

பாவமன்னிப்புக்கோரினர். இறைவனின் வழிகாட்டலை நாடினர்.

அர்னோ ஆற்றில், அழிவு வரப்போகின்றது என்று அஞ்சிய நூற்றுக்கணக்கானோர் நிர்வாணமாகப் பாய்ந்தனர்.

''உலக அழிவு வந்துவிட்டது; நாம் காதல் புரிவோம்''— என்று பாடிய படியே அவர்கள் ஆற்றில் நீராடினர்.

புளோரன்ஸ் நகரப் பொலீஸாருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

உலகின் அழிவைப் பத்தி நினைப்பதா? கடமையைச் செய்வதா? இதுபற்றித் தீர்மானிக்க அவர்களுக்கு முடியாதிருந்தது.

உலக அழிவுக்குரிய திகதி பெப்ரவரி 29 ஆக பெரும்பாலும் இருந்து வந்தாலும் டிசம்பர் 25, 26 ஆம் திகதிகளையும் சோதிடர்கள் சில நாடுகளில் விட்டு வைக்கவில்லை.

பொலிவியாவில் உள்ள செய்திப்பத்திரிகை ஒன்று 1964 டிசம்பரில் ஒரு செய்தி வெளியிட்டது.

உலக அழிவு டிசம்பர் 25 இல் என்று அச்செய்தி தெரிவித்தது.

1960ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் நாள். டாக்டர் எலியோ பியாங்கா தலைமையில் 40 சீடர்கள் ஏழாயிரம் அடி உயரம் உள்ள மலை உச்சியில் ஏறிக் கொண்டனர். 15 அறைகள் கொண்ட பெரிய பெட்டி ஒன்றை அமைத்துக் கொண்டனர்.

அன்று பிற்பகல் 1 45 மணிக்கு பூமிவெடிக்கும். அப்போது அப்பெட்டிக்குள் பதுங்கியிருந்து தப்பித்துக் கொள்ளலாம். இப்படி அவர்கள் நம்பினர்.

1.45 போனது. மணி 1.58 ஆனது. மலையில் இருந்து இறங்கி வந்து கீழே குழுமியிருந்த பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் டாக்டர் பியங்கா.

''எவரும் பிழைகள் விடலாம்—'' இவ்வாறு தான் அவர் சொன்னார்.

இந்த டாக்டர் உலகின் 'மிஸ் என்ட்'(Miss End) அழகுராணிப் போட்டி ஒன்றைக்கூட ஒழுங்கு செய்திருந்தார்.

1960 ஜூலையிலும் சில மதகுருமார்கள் உலகம் அழியும் என்று கூறினர்கள்.

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பிய நாட்டில் இது நடந்தது.

ஜோஸ்யம் பொய்த்தது. ஆத்திரங்கொண்ட பிரசைகள் அந்த மத குருமார்கள்மீது வழக்கு தொடுத்தனர்.

மதகுருமார்களை நம்பியவர் பிச்சைக்காரர்களாயினர். அவர்களில் ஒருவன் வெடி மருந்து வியாபாரி. வழக்குத் தோற்றதால் இன்னும் ஆத்திரம் அவனுக்கு ஏற்பட்டது.

வெடி மருந்துகளைச் சேர்த்தான். மதகுருமார்களின் விடுதி, மூன்று தேவாலயங்கள் ஆகியவற்றை வெடி மருந்துகளைக் குவித்துத் தகர்த்த பின்னரே அவனின் ஆத்திரம் தணிந்தது அவன்மீது பொலீஸார் வழக்குத்தொடர்ந்தனர் இறுதியில் அவன் தனது வாழ்நாளை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கழித்தான்.

1974 செப்டம்பரில் ஒரு நாள் அமெரிக்காவில் ஆர்கன்ஸா மாநிலத்தைச் சேர்ந்த வயலிஸ் வாக்கர் என்ற பெண் ஒரு கனவு கண்டார்.

உலகின்முடிவுநெருங்கி விட்டது என்று அவருக்கு அக்கனவு உணர்த்தியது.

உடனே பாடசாலைக்கு ஓடிச் சென்று தனது மூன்று குழந்தைகளையும் அழைத்து வந்தார். நெருங்கிய உறவினர்களை எல்லாம் திரட்டி மொத்தமாக 21 பேரையும் தனது வீட்டில் வைத்துக் கொண்டார்.

அரசுக்குச் செலுத்த வேண்டிய மின்சார பற்றும் வரியைச் செலுத்துவதை நிறுத்திக் கொண்டார் அவர்.

டிசம்பர் பிறந்தது. அவரின் கனவு பகல் கனவானது.

உலகம் அழியவில்லை. கடன் காரர்கள் அவரின் வீட்டை முற்றுகையிட்டனர்.

வீட்டை அடைமானமாக யாருக்கு வைத்தாரோ அவர் வந்து வாக்கரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்.

உலகம் அழியப்போகும் சோதிடம் லீப் ஆண்டு பிறக்கும் போது 'தேவன்றி மறையுர்' சம்பவமாக மாறிவிட்டது.

1988 ஆம் ஆண்டும் இதற்கு விதி விலக்காகி விடுமா? உயிருடன் இருந்து பார்ப்போமே! ✲

## 'விஜே'யின் கடைசி நிமிடங்கள்

விஜே குமாரணதுங்கா மறைந்துவிட்டார்.

திரையுலகில் ஒரு நட்சத்திரமாக மின்னியவர், அரசியல் வானில் ஒரு தாரகையாக மிளிர்ந்தவர்.

அவர் மரணத்தைச் சந்திப்பதற்கு முன்னர் என்ன கூறினார்?

மரணம் வரப்போவதை அவர் உள்ளுணர்வு அறிந்துகொண்டதா?

மோட்டார் சைக்கிளில் காலன் அவரின் வீட்டை நோக்கி வருவதற்கு முன்னர்...

உபாலி சரத் என்ற ஆதரவாளருடன் விஜே பேசிக்கொண்டிருந்தார்.

உபாலி வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர். அதற்காக விஜே மூலம் முயற்சி செய்து வந்தார்.

அன்றைய தினம் உபாலிக்குத் தகவல் வந்தது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கிடைத்து விட்டது என்று.

இதைத் தனது தலைவரிடம் சென்று சொல்ல விரும்பினார் உபாலி.

விஜே முன் சென்று முழங்காலில் மண்டியிட்டுச்சிங்களக் கலாசாரத்தின்படி வெற்றிலையை அவரின் கையில் உபாலி கொடுத்தார்.

விஜே ஆச்சரியப்பட்டார்.

இந்தப் பழக்கத்தை யார் உனக்குச் சொல்லித் தந்தது? — இப்படி விஜே கேட்டார்.

உபாலி தனக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிடைத்த செய்தியைத் [illegible]

நீர் வெளிநாடு [illegible] போனால் எனக்கு உதவ [illegible] தயார்? — இப்படி விஜே திருப்பிக் கேட்டார்.

விஜேயுடன் அவரின் மனைவி சந்திரிகாவும் இதைத்தான் சொன்னார்.

''இரண்டொரு ஆண்டுகளில் உழைத்து விட்டுத் திரும்பி வந்து விடுவேன்'' இப்படி உபாலி சொன்னார்.

''நீர் வெளிநாட்டில் இருந்து திரும்பி வருவதற்குள் என்சடலத்தைப் புதைத்த புதைகுழியில் மரமும் முளைத்துவிடும்'' இப்படி விஜே கூறினார்.

இச்சம்பாஷணை இடம் பெற்ற சில நிமிடங்களில் விஜே அமரரானார்; [illegible] ஏற்பட்டது. ★


## யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்து விடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி வருவான்!!



உதயசேவை

விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

இலவசம்! இலவசம் !!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரியும் சிவனும் இருவரல்ல; ஒருவரே!

திருமுருக கிருபானந்த வாரியார்

**சமயம்**

சிவம், விஷ்ணு என்ற இரு பெருங் கடவுள்களை நமது பாரத நாட்டில் சான்றோர்கள் வணங்கி வழிபடுகின்றார்கள். சிவத்தை வழிபடுகின்றவர்கள் சைவர்கள்; விஷ்ணுவை வழிபடுகின்றவர்கள் வைஷ்ணவர்கள்.

உண்மையறிதற்கு ஊழ் வேண்டும். உண்மையுணராத சைவர்களும் வைஷ்ணவர்களும், வேற்றுமை மனம் படைத்து, ஒருவரையொருவர் வைதும் வாதிட்டும், அமைதியும் சாந்தியும் இன்றி அல்லற்படுகின்றார்கள்.

சைவர்கள் விஷ்ணுவை நிந்திப்பதும், வைஷ்ணவர்கள் சிவத்தை நிந்திப்பதுமாக இருக்கிறார்கள். இவர்கட்கு நிந்தனையில் ஒரு மகிழ்ச்சி இது அறியாமையின் சிகரம்.

இந்த உலகை உற்று நோக்குங்கள்: தட்பமும் வெப்பமும் சேர்ந்து எங்கும் காணப்படுகின்றன.

ஒரு மலர், மலராக இருக்க வேண்டுமாயின் தட்பமும், வெப்பமும் அதில் சமானமாக இருக்க வேண்டும். மலர் வாடுகின்றது; காரணம் என்ன? அதில் சமமாக இருந்த குளிர்ச்சி குறைந்து விட்டது. மலர் அழுகிவிடுகின்றது. காரணம் என்ன? அதில் சமமாக இருந்த சூடு குறைந்து விட்டது. எனவே, சூடும் குளிர்ச்சியும் ஒன்றையொன்று விடாமல் கலந்து மலரில் இருப்பதனால்தான் மலர் அழகு செய்கின்றது.

நமது உடம்பில் தட்பமும், வெப்பமும் அமைந்திருக்கின்றன. சூடு குறைந்து விடுமானால் உயிர் உடம்பில் நிலைபெறுவதில்லை. சூடு குறையத் தொடங்கியவுடன் சுற்றத்தார் சுற்றி அமர்ந்துவிடுகிறார்கள்.

சூடும் குளிர்ச்சியும் எல்லையற்றிருக்குமானால் உயிர்கள் அங்குதோன்றுவதில்லை. சூடு குறைந்த, வடதுருவப் பிரதேசங்களிலும் குளிர்ச்சி குறைந்த சஹாராவிலும் உயிர்கள் இடர்பட்டுத்தான் வாழ்கின்றன!

தட்பத்தின் சூக்கும ஆற்றல் திருமால்; வெப்பத்தின் சூக்கும ஆற்றல் சிவம். இந்த இரு பொருள்களும் ஒரே பொருளின் இரு பகுதிகள்.

அடியேன் 16 மாகாணங்கள் சுற்றியிருக்கிறேன்; கடல் கடந்து பல நாடுகள் சென்றிருக்கிறேன். இதுவரை நான் ஒரே பக்கமுள்ள காகிதத்தைக் கண்டேனில்லை; ஒரு பக்கமுள்ள கடிதம் எங்காவது இருக்க முடியுமா? எத்துணை மெல்லிய கடிதமாயிருப்பினும்' அதற்கும் இரு பக்கம் இருந்தே தீரும். ஒரு நாணயம் என்றால் அதற்கும் இரு பக்கங்கள். ஒன்று சிவம்; மற்றொன்று விஷ்ணு:

சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்கு என்று சிவாகமங்கள் கூறுகின்றன. இந்த அறுபத்து நான்கு மூர்த்தங்களில் ஒன்று கேசவார்த்த மூர்த்தி; பாதி சிவம்; பாதி மால்.

சங்கரநாராயணர் திருக்கோயிலில் இந்த மூர்த்தி இன்றும் காட்சி தந்து இந்த உண்மையை உணர்த்திக் கொண்டிருக்கிறது.

பேயாழ்வார் திருவேங்கடமலைக்குச் சென்றார். அங்குள்ள பெருமானைக் காண்கின்றார். ஒருபுறம் சடை முடியும், மற்றொரு புறம் மணிமுடியும் - ஒரு கரத்தில் மழுவும், மற்றொரு கரத்தில் சக்கரமும் - ஒரு பாதியில் நாகாபரணமும், மற்றொரு பாதியில் பொன்னாபரணமுமாக அவ்வுருவம் காட்சி தருகின்றது.

அவர் அருட்கவி. உடனே பாடுகின்றார்:

'தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந்
தோன்றுமால் - சூழுந்
திரண்டருவி பாயுந்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து'

என்ன அருமையான காட்சி! இப்பாடலின் மாட்சிதான் என்னே! பேதபுத்தியில்லாத பெருந்தகைமை!

சிவத்தை வழிபடுகின்ற சிவனடியாரை நிந்திக்கின்ற திருமாலடியாரும், திருமாலை வழிபடுகின்ற திருமாலடியாரை நிந்திக்கின்ற சிவனடியாரும் இங்கு மாறுபட்டு வேறுபட்டாலும் வெந்தீ நரகில் ஒன்றுபட்டு விடுகின்றார்கள்.

நரகக்குழியில் இரண்டு பேருந் துள்ளித்துடித்து, 'அண்ணே, உன்னை நிந்தித்து இந்தக் கதிக்கு நான் ஆளானேன்' என்று இருவரும் அங்கு ஒற்றுமைப்பட்டு விடுவார்கள்.

அருணகிரியார் பாடுகின்றார்:

'ஈசர்விஷ்ணுவை
சேவை செய்வோர்தமை
இகழ்வோர்கள்
...னர் இத்தனை
பேர்களும் ஏழ்
நரகுழல்வாரே'
—(ஓதுவித்தவர்)
திருப்புகழ்.

ஆகவே அடியவர்கள் சிவநிந்தையும் விஷ்ணு நிந்தையும் புரிந்து நரக வெந்துயருக்கு இலக்காக வேண்டாம் என வேண்டுகின்றேன்.

தட்பத்தின் நிறம் பச்சை. குளிர்ச்சியை விரும்புகின்றவர்கள் கண்களுக்குப் பச்சைக் கண்ணாடி புனைகின்றார்கள். படுக்கை வீட்டில் குளிர்ச்சியாக இருக்கும் பொருட்டு பச்சைக் கண்ணாடிகளுடன் கூடிய விளக்கை எரிக்கின்றார்கள். குளிர்ந்த பயிர் பச்சைப் பசேல் என்று காட்சி தருகின்றது.

திருமாலின் நிறம் பச்சை. 'பச்சைமாமலை போல் மேனி'

வெப்பம் அதிகமானால் கண் சிவக்கின்றது. நெருப்பின் நிறம் சிவப்பு. சிவமூர்த்தி பவளம் போன்ற மேனியையுடையவர்.

குளிர்ச்சியான திருமால் நீரிடைத் துயில்கின்றார். வெப்பமான சிவம் மயானத்தில் நடிக்கின்றார்.

திருமால் கோயிலில் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படுகின்றது. சிவாலயத்தில் வெந்த வெண்ணீறு வழங்கப்படுகின்றது. தட்பமான திருமாலுக்கு சூட்டையுண்டு பண்ணுகின்ற துளசிமாலை.

வெப்பமான சிவத்துக்கு குளிர்ச்சியைத் தருகின்ற வில்வமாலை.

நமக்குச் சீதளம் உண்டாகி, நீர் கோத்துக் கொண்டு தொண்டை அடைத்து விட்டால் துளசியிலையின் கஷாயத்தைத் தருகின்றார்கள்.

பெருநோய், தொழுநோய், மஹாரோகம் என்கின்ற கொடிய உஷ்ண வியாதியுடையோர் சிறந்த மஹா வில்வ இலையை அதிகாலையில் முறையே உண்பாராயின், அந்நோயின் கொடுமை தணியும்.

நமது முன்னோர்கள் அமைத்த இந்த அரிய நுட்பங்களை உன்னிப் பார்த்தால் பெருவியப்புத் தோன்றுகின்றது.

திருவரங்கத்தையும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார்கள்.

பொன்னம்பலத்தையும் கோயில் என்ற சொல்லாலேயே கூறுவார்கள்.

பூவுலக வைகுண்டம் - ஸ்ரீரங்கம்.

பூவுலக கைலாயம் - சிதம்பரம்.

இரு பெருந்தலங்களுக்கும் சபை என்றுதான் பேர் அரங்கம் என்றால் சபை. அரங்கேற்று காதை என்று சிலப்பதிகாரத்தில் கூறுவதைக் கேட்டிருப்பீர்களே ...... புராணம் அரங்கேற்றம் என்பார்களே.

ஆகவே ஒன்று திருவரங்கம்; ஒன்று கனகசபை; இரண்டையும் பொன்னரங்கம் என்றே ஆன்றோர்கள் அமைத்துள்ளார்கள். திருவரங்கத்தில் அரங்கராஜா; ஞானசபையில் நடராஜா.

மார்கழி வைகுண்ட ஏகாதசியில் திருவரங்கத்தில் சிறப்பு விழா. கனகசபையிலும் திருவாதிரை சிறப்புவிழா.

இப்பெருந்தலங்கட்குச் சென்று சேவிக்க மாட்டாதவர்களுக்குச் சிதம்பரத்திலேயே ஒருசேர வைத்து, ஒரே கும்பிடு இருவருக்கும் சேருமாறு திருமால் பள்ளி கொண்டிருக்கவும் கூத்தப் பெருமான் திருத்தாண்டவம் புரியவும் அமைந்த அமைப்பு எத்தனை இன்பத்தைத் தருகின்றது. ஒருவர் நடராஜர்; இன்னொருவர் கோவிந்தராஜர்.

பொய்கையாழ்வார் கூறும் புனித வாக்கையும் ஈண்டு உணர்க.

'பொன்திகழு மேனிப்
புரிசடையெம்
புண்ணியனும்
நின்றுலகந் தாய
நெடுமாலும் - என்றும்
இருவரங்கத் தால்திரிவ
ரேனும் ஒருவன்
ஒருவனங்கத்
தென்றும் உளன்.

ஆதலால் ஒரு பரம்பொருளின் இருதன்மைகள் நன்மையும், நிறைவும்.

நன்மை - சிவம்.

நிறைவு - திருமால் (விஷ்ணு - வியாபகமானது) ஒன்றில் இந்த இரண்டும் அமைந்துள்ளது.

எனவே வேற்றுமை உணர்ச்சியின்றி ஒன்றில் இரண்டையும் பார்த்து ஒன்றுபட்டு, உலகம் உய்வு பெறுக! ★

# பூக்குந் தாவரங்களின் உருவவியல்

- கே. எஸ். குகதாசன் -
(அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)




குறிப்பு:

தாவரங்களைக் கூர்மையாகத் தகுதிவாய்ந்தமுறையில் அவதானிப்பதுடன் அவற்றின் பகுதிகளை விளக்கி விவரிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். தனது சூழலில் காணப்படும் பூக்குந் தாவரங்களை மாணவர் தெரிந்திருக்கவேண்டும். இத்தாவரங்களின் பொதுப் பெயர்களை மாணவன் அறியமுயலவேண்டும். தாவரவியலில் முக்கியத்துவம் வாய்ந்த தாவரங்களின் தாவரவியற் பெயர்களும் தெரிந்திருக்கவேண்டும். இயற்கையில் காணப்படும் தாவரங்கள் மட்டுமல்லாமல், பயிர்செய்யப்படும் தாவரங்களைப் பற்றியும் தெரிந்திருத்தல் அவசியம். தாவரங்களை அவற்றின் உருவவியலுக்குரிய சிறப்பியல்புகளின் அடிப்படையில் அறியமுயலவேண்டும்.

0.0: உருவவியல்
(Morphology)

தாவரங்களின் (அங்கிகளின்) உருவமைப்பு அல்லது புறத்தோற்றம் பற்றிய விவரமான படிப்புஉருவவியல் எனப்படும்.

1.0: அங்கியோசுப் பெருர்கள்

(Angiosperms): பூக்குந் தாவரங்கள் பாகுபாட்டு அடிப்படையில் அங்கியோசுப் பெரும்கள் என அழைக்கப்படும். அங்கியோசுப் பெரும்கள் என்பதன் கருத்து வித்து மூடியுளி, அதாவது விதைகள் கனிகளுக்குள் வைக்கப்பட்டிருக்கும்.

அங்கியோசுப்பெரும்களின் தோற்றஅமைப்பு, வாழ்க்கை வட்டம், தண்டு இலை, வேர், பூ போன்ற அமைப்புக்கள் ஆகியவற்றில் வியத்தகும் பல்லினத்துவமுமுண்டு. உருவவியலில் அடிப்படையில் இதை முதல் ஆராய முற்படலாம்.

1.0: தாவரத்தின் பகுதிகள்:

சாதாரண ஒரு தாவரத்தில் ஒரு பூக்குந் தாவரத்திற்குரிய அமைப்புக்களை அவதானிக்க முடியும். ஏதாவதொரு இருவித்திலைப் பூண்டுத் தாவரத்தை ஆராயலாம். இதை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தாவரங்களில் வியத்தத்தை அவதானிக்கலாம்.

ஒரு தாவரத்தின்பகுதிகளை இருபகுதிகளாகப் பிரிக்கலாம் —பதியப் பகுதிகள், இனம்பெருக்கும் பகுதிகள், சாதாரண வாழ்க்கைக்குரிய பகுதிகள் பதியப்பகுதிகளாகும்; இனப்பெருக்கத்திற்கு உதவும் பகுதிகள் இனம் பெருக்கும் பகுதிகளாகும்.


பதியப் பகுதிகளில், நிலத்திற்குக் கீழுள்ள தாவரத்தின் பகுதிகள் வேர்த் தொகுதியெனவும், நிலத்திற்கு மேலே உள்ளது அங்குரத் தொகுதி எனவும் கொள்ளப்படும்.

வேர்த் தொகுதியில் தலையாயவேர் ஆணிவேர் அல்லது மூலவேர் எனப்படும். இதிலிருந்து தோன்றும் கிளைகள் பக்கவேர்கள் எனப்படும். பக்கவேர்கள் உச்சிநாட்டமுள்ள வழிமுறை வருதலில் தோற்றுவிக்கப்படும். வேரின் முனையில் பாதுகாப்பிற்காக வேர்மூடியுண்டு. வேர்த்தொகுதி தாவரத்தை நிலையூன்றச் செய்வதுடன் அகத்துறிஞ்சலுக்கும் உதவும்.

அங்குரத் தொகுதியில் தாவரத்தின் அச்சாக உள்ள பகுதி தண்டு எனப்படும். இதன்முனையிலுள்ளது முனையரும்பு அல்லது நுனியரும்பு எனப்படும். கிளைகளின் முனைகளிலுள்ளவையும் நுனியரும்புகளே. தண்டில் இலைகள் தோன்றுமிடம் கணுக்களெனவும், இரு கணுக்களுக்கு இடைப்பட்டபகுதி கணுஇடையெனவும் அழைக்கப்படும். இலையுடன் தொடர்பாக இலைக்காம்பு, இலைப்பரப்பு, நடுநரம்பு, கிளைநரம்புகள் ஆகியபகுதிகள் காணப்படும். இலைக்காம்பினடிக்கும் தண்டுக்குமிடைப்பட்ட கோணம் கக்கம் எனப்படும். இதிலுள்ள அரும்புகள் கக்கவரும்புகள் எனப்படும். இலைக்காம்பினடியில் இருபக்கத்திலும் இரண்டு சிறிய செதில்போன்ற அமைப்புக்கள் இருக்கலாம். இவை இலையடிச் செதில்கள் எனப்படும். ஒரு கக்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அரும்புகள் இருக்கலாம், அதாவது மேலதிகமான அரும்புகள் இருக்கலாம்.

தண்டு இலைகளையும் கிளைகளையும் தாங்க உதவும். இலைகள் ஒளித்தொகுப்பிற்குதவும். அரும்புகள் கிளைகளாக வளரும் அல்லது திரிபடைந்து பூக்களைத் தோற்றுவிக்கும்.

பூக்கள் இனப்பெருக்கத்திற்குரிய பகுதிகளாகும். ஒரு பூ புல்லிவட்டம், அல்லிவட்டம் ஆணகம், பெண்ணகம் ஆகியபகுதிகளைக்கொண்டிருக்கும். ஆணகம் கேசரங்களைக் கொண்டிருக்கும். கேசரங்கள் மகரந்தமணிகளைத் தோற்றுவிக்கும். பெண்ணகம் சூல்வித்திலைகளைக் கொண்டிருக்கும். சூல்வித்திலையினுள் சூல்வித்துக்கள் காணப்படும் கருக்கட்டலைத் தொடர்ந்து சூல்வித்து விதையாக விருத்தியடையும், சூல் வித்திலை தனியாக விருத்தியடையும்.




தாவரத்தின் பகுதிகள்

(வளரும்)

# பட்டாளம் பாட்டா மருந்து கட்டிய படலம்!

ப

கோயிலுக்குப் போன வேட்டியுடன் வேகமாய் நடந்து மருத்துவ மனையை அடைந்தார் பட்டாளம் பாட்டா.

இரண்டாவது உலகப் போரில் இடது தோளில் குண்டு பாய்ந்து ஆறு மாத காலம் மருத்துவ மனையில் இருந்தது முதல் தான் மருத்துவமனை செல்ல நேர்ந்த சந்தர்ப்பங்கள் பலவற்றை வரிசையாய் நினைத்துப் பார்த்தார். அப்போதெல்லாம், தான் சந்தித்த மருத்துவர்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டார். அவர்களிலும் எத்தனை வகை! அன்பானவர்கள், நாய் போல் சுடிப்பவர்கள், பொறுமைசாலிகள் தலைக்கனம் உடையவர்கள், சுடுநீர் போன்றவர்கள், தனக்கு நோய் எதுவும் இல்லாமல், தொண்டு செய்ய வென்றே மருத்துவமனைக்குச் சென்ற நாள்களையும் இரை மீட்டார்.

இலக்கத் துண்டை எடுத்துக் கொண்டு வாங்கில் போய் அமர்ந்தார். காலில் ஏற்காயம் 'விண் விண்' என்று வலித்துக் கொண்டேயிருந்தது.

வைத்தியருக்காகப் பலர் வரிசையில் காத்திருந்தனர். தனக்கு முன்னே அமர்ந்திருந்த கிழவியைக் கவனித்தார் பாட்டா. அறையின் உள்ளே இருந்த வைத்தியரை எட்டி எட்டிப் பார்த்தாள் கிழவி.

''இந்த அறையில் இருக்கும் வைத்தியருக்கோ, அந்த அறையில் இருக்கும் வைத்தியருக்கோ காட்டப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் பாட்டா.

கிழவி முருகபுரத்துக் கிழவிதான்! பண்டிதர் பரமசிவத்திற்குத் தூரத்து உறவு என்ற நினைவு. கிழவி பாட்டாவை இடுங்கிய கண்களால் பார்த்தாள். கண்களில் தெளிவான பார்வை இல்லை என்பது தெரிந்தது. அவள் பாட்டாவை யாரென்று இனங்காணவில்லை.

''எனக்கு இவர்கள் இரண்டுபேரையும் பிடிக்கவில்லை. அன்று அந்த அறையில் இருந்த பெரியவரை' பார்க்க ... ஐயா ஒருவர்தான் தன்னுடைய கையால் மருந்து தந்தவர். நல்ல இராசியான கை-'' என்று மருந்தாளர் அறையைச் சுட்டினாள் கிழவி.

கிழவி மருந்தாளரைத்தான் பெரிய வைத்தியர் என்று குறிப்பிடுகிறாள் என்பது பாட்டாவுக்குப் புரிந்தது.

''இன்றும் அவர் கையால் மருந்து வாங்கலாம் ஆச்சி'' என்றார்.

''ஆச்சிக்கு என்ன வருத்தம்?'' பக்கத்தில் இருந்த இளைஞன் கேட்டான்.

''அது... ஐயாவுக்குச் சொல்லுவேன். கண்ட நிண்ட எல்லாருக்கும் ஏன்சொல்ல வேணும்?'' என்று ஆச்சி பாய்ந்ததைத் தொடர்ந்து மௌனமானான் இளைஞன்.

நவ நாகரிக மங்கை ஒருத்தி மிகவேகமாக உள்ளே வந்தாள். ... யவள் போல் தோன்றவில்லை. வெளியில் தோன்றாத வருத்தங்கள் ஏதும் இருக்கலாம்.

வைத்தியரின் அறை வாசலுக்கு வந்து அமர்ந்து கொண்டாள். ஆச்சிக்கு முன்னே இருந்த சிறிதளவு இடைவெளியில் அவள் வில்லங்கமாக வந்து அமர்ந்தது.

> தமிழருவி சண்முகசுந்தரம் எழுதிய தொடரை கோகிலா மகேந்திரன் தொடர்கின்றார்

ஆச்சிக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை.

''பிள்ளை துண்டு எடுத்தாயோ?'' என்று கேட்டாள்.

''எனக்கு வைத்தியரைத் தெரியும்'' என்று மிடுக்காகப் பதிலளித்தாள் அவள்.

''உனக்கு யாரையும் தெரிந்தாலென்ன ... னெட்டாந்துண்டு நான். உன்னை இடையில் போகவிட மாட்டேன்'' என்று விடாமல் பேசினாள் ஆச்சி.

நாகரிக மங்கை கிழவியை உறுத்துப் பார்த்தாள்.

''ஆச்சி சொல்வது சரிதானே. நாங்கள் இவ்வளவு பேர் துண்டு எடுத்து முறையாகக் காத்திருக்க, நீர் எப்படி இப்போது வந்து இடையில் போகலாம்?'' என்று நியாயத்தை ஆதரித்தார் பாட்டா.

ஆச்சிக்கு மிகுந்த மகிழ்வாகப் போய்விட்டது.

''தம்பி நீங்கள் யார் ... விளங்கவில்லை'' என்று நேரடியாகக் கேட்டாள்.

''நான்தான் பட்டாளம் பாட்டா'' என்று பாட்டா சொன்னதும், கிழவி பூரித்து, 'ஓமோம் உங்கள் அடைச்சல் குரல் எனக்கு நன்றாகத் தெரிந்த குரல். இப்போது மறந்து போய் விட்டது பாருங்கோ...'' என்று கூறிப் 'பாட்டாவுக்கு என்ன வருத்தம்?'' என்று அன்புடன் விசாரித்தாள்.

''கோயிலுக்குப் போன இடத்தில் நெருப்பினால் ஒரு சின்னக் காயம்'' என்றார் பாட்டா.

இருவரும் ஒரே ஊரார்தான் என்பதைப் புரிந்து கொண்ட நவ நாகரிக மங்கை, ''இவர்கள் போன பின் பார்ப்போம்'' என நினைத்து எழுந்து விலகி நின்றார்.

ஆச்சி மருந்து எழுதிக் கொண்டு வந்த பின்னர் பாட்டா உள்ளே சென்றார். ''நீங்களும் பெரிய ஐயாவிடமோ மருந்து?'' என்று கேட்டார் மருத்துவர்.

ஆச்சி தனது விருப்பத்தை இங்கும் தெரிவித்திருப்பது விளங்கிச் சிரித்தார் பாட்டா.

''நான் பெரிய தாதி அம்மாவிடம் மருந்துசட்டுகிறேன்'' என்றார். மருந்து கட்டிக்கொண்ட காலுடன் நொண்டி நொண்டி வெளியே வந்தார். உடனே வீட்டுக்குப் போக மனம் வரவில்லை.

நோயாளர் வரிசையில் செல்ல உதவுதல், நடக்க முடியாதவர் தன்னு வண்டியில் ஏற உதவுதல், வெளியே மருந்து வாங்க வேண்டிய சிலருக்கு வாங்கிக்கொடுத்து உதவுதல் போன்ற சில தொண்டுகளைத் தன் கட்டுக் காலுடனும் செய்துவிட்டு, ''விடாமல் ஓடித்திரியும் எனக்கு நல்ல கால்கட்டு. முருகா துணை குருவே சரணம்'' என்று தனக்குள் கூறிக்கொண்டே வீட்டை நோக்கி நடையைக் கட்டினார் பாட்டா.

(வளரும்)



ஒருவர்: ஒவ்வொரு நாளும் விடியற்காலமை எழும்பி ஐந்துமைல் ஓடுறீங்களாம். எப்படி? இத் தூரத்தை ஒரு மணித்தியாலத்தில் ஓடிமுடிச்சு விடுவீங்களா?

மற்றவர்: அதைச் சரியாகச் சொல்ல ஏலாது. அது அண்டஅண்டைக்கு என்னைக் கலைக்கிற நாயின்ரை வேகத்தைப் பொறுத்தது.

—குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியலைக் கலக்கியடிக்கும் சினிமா நட்சத்திரங்கள்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் மறைந்தது அரசியல் உலகுக்குப் பெரிய இழப்பு- அதிலும் அ.தி.மு.கவுக்கு பேரிழப்பு மாத்திரமன்றி, பேரிடியாகவும் அமைந்து விட்டது.

இப்போது அ. தி மு. க. வை இரண்டு அணியாகப் பிரித்து எம். ஜி. ஆரின் இரண்டு நாயகிகள் அதைக்கோலோச்சுகிறார்கள்.

அன்றைய சினிமா நாயகிகளான ஜானகியும், ஜெயலலிதாவும் சினிமா உலகில் நாயகிகளாக இருந்ததைப் போல் அரசியல் உலகிலும் நாயகிகளாக வரத் துடிக்கிறார்கள்.

இந்த நாயகிகளுக்குப் போட்டியாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் தமிழக முன்னேற்ற முன்னணி என்ற ஒரு சட்சியை ஆரம்பித்து விட்டார்,

இந்த நட்சத்திரங்களின் அணிகளில் இன்னும் எத்தனையோ நட்சத்திரங்கள் இணையும் அறிகுறி இப்போது தெரிகிறது.

ஏற்கனவே சிவாஜியின் அணியில் மேஜர் சுந்தரராஜன் இணைந்து விட்டார்.

ஜானகி, ஜெயலலிதா அணிகளின் பின்னணியில் நடிகர், நடிகைகள், தயாரிப்பாளர்கள் டைரக்டர்கள் இன்னும் பல சினிமா உலகப் பிரமுகர்கள் செயற்படுகிறார்கள்.

அவர்கள் மேடைகளில் பகிரங்கமாக முகம் காட்டாமல் இருந்து வருகிறார்கள் சேர்கல் பிரசாரத்தூ



பிடிக்கும் வேளையில் அவர்களின் ''திருமுகங்கள்'' தெரியவரும்.

தி. மு. கவில் ஏற்கனவே பிரபலமானவர் ராஜேந்தர். அவர் அ. தி. மு க. வை பலமாக காரமாக எதிர்த்து வந்தவர்.

இனி வரும் தேர்தலில் வழமையான அவரது ''காரம்'' இன்னும் கூடுதலாகவே இருக்கும். அதுமட்டுமல்லாமல் சினிமா உலக இரகசியங்கள் பலவும் அம்பலத்துக்கு வரும்.

எம் ஜி. ஆரின் சினிமா உலக வாரிசான பாக்கியராஜுக்கும் அரசியலில் ஓரளவு செல்வாக்கு உண்டு.

அ. தி. மு. க. வின் தேர்தல் பிரசாரப் பீரங்கியாக இருந்த அவர் எந்த அணியில் சேருவார் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அரசியலில் எதுவும் நடக்கலாம் என்ற ரீதியில் அவர் தி. மு. கவில் இணைந்து விட்டதாக தமிழகத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இச்செய்தி இன்னும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

அச்செய்தி உண்மையானுல் சினிமா உலகிலும் சில புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. பாக்கியராஜின் படங்களிலும் தி. மு. க. வின் கருத்துக்கள் பரப்பப்பட்டு அ. தி மு க.வின் ஆதரவாளர்கள் மத்தியில் ஒரு குழப்பநிலையை உருவாக்கும்.

சினிமா உலகில் அன்று ஜெயலலிதா கொடிகட்டிப் பறந்தது போன்று, அரசியலிலும் கொடிகட்டிப் பறப்பாரா?

இந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் கூற முடியாத நிலை இருப்பினும் அவரது வர்ணப் ''போஸ்டர்கள்'' தமிழகத்தின் மூலை முடுக்கு எங்கும் காட்சியளிப்பதைப் பார்க்கும் போது அவருக்கும் செல்வாக்கு இருப்பது தெரிகிறது.



இதைக் கூட்டு மொத்தமாக ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழக அரசியலில் சினிமா உலகம் புகுந்து விட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. (ஒ)

## மறக்க முடியாத கலைஞர் சகஸ்ரநாமம்

முதுபெரும் நாடக நடிகரும், திரைப்பட நடிகரும், நாடக கம்பனியினது நிர்வாகஸ்தரும் திரைப்படத் தயாரிப்பாளருமான குணசித்திர நடிகர் எஸ் வி. சகஸ்ரநாமம் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி காலமாகி விட்டார்.

1913 ஆம் ஆண்டில் பிறந்த இவர் தமது 13 ஆவது வயதில் நாடக உலகில் பிரவேசித்தார். ரி. கே. எஸ் சகோதரர்களின் நாடக மன்றத்தில் அவருக்கு இடம் கிடைத்தது.

நாடக உலகில் நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட அவர் பல வருடங்களின் பின்னர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுடன் சேர்ந்து என். எஸ். கே. நாடக சபாவை நிறுவி அதன் நிர்வாகஸ்தராகப் பணி புரிந்தார்.

சினிமா உலகிலும் பல சாதனைகளை இவர் புரிந்துள்ளார். இவர் தயாரித்த பல படங்கள் வெற்றிகரமாக ஓடியுள்ளன.

நடிகர் சங்கவிழா ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில் இவர் மாரடைப்பால் மரணமானுர். இவரின் மறைவு கலையுலகிற்கு மாபெரும் இழப்பாகும்.

நாடகமாமணி
க. கனகையா

## 'தென்பாண்டி சீமையிலே'

உழைப்பாளர் பிலிம்ஸ் தயாரிக்கும் ''தென்பாண்டி சீமையிலே'' என்ற வர்ணப் படத்தில் விஜயகாந்த் கே. ஆர். விஜயா ஜோடியாக நடிக்கிறார்கள்.

இந்தப் படத்துக்காக பாக்கியராஜ் இசை அமைத்த ஒரு பாடல் ஏ. வி. எம். ஸ்ருடியோவில் பதிவு செய்யப்பட்டது.

கதை, வசனத்தை ராமநாராயணன் எழுத சி. பி. கோலப்பன் டைரக்ட் செய்கிருர்.

என். கே. விசுவநாதன் ஒளிப்பதிவைக் கவனிக்கிருர். (ஒ)

## வெள்ளித் திரை

## பக்திப் படத்தில் மீனுட்சியாக ராதா

சிவகை விஜயகாந்தும், மீனுட்சியாக ராதாவும் நடிக்கும் புதிய பக்திப் படத்தைகே. சங்கர் இயக்குகிறார்.

பல தெலுங்குப் படங்களைத்தயாரித்த லட்சுமி சணபதி பிலிம்ஸார் இப்போது ''மீனுட்சி திருவிளையாடல்'' என்ற பக்திப் படத்தைத் தயாரிக்கிறார்கள்.

அதிக செலவில் பிரமாண்டமான படைப்பாக இது அமையும்.

எம். என். நம்பியார், ஜெய்கணேஷ், சரத்பாபு, சோமயாஜுலு, சீர்காழி கோவிந்தராஜன், செந்தில், சோ- அம்பிகா, ரேகா, சரிதா, மனோரமா, சுமித்ரா, பிரபா, உசிலை மணி, ஹெரான் ராமசாமி மற்றும் பலர் நடிக்கிறார்கள். (ஒ)

## ரஜனியின் நகைச்சுவை

நடிகர் ரஜனி காந்த் படப்பிடிப்பு இடைவேளைகளில் சக நடிகர், நடிகைகளுடன் உரையாடும்போது நகைச்சுவையையும் கலந்து விடுகிறார்.

இதனுல் ஸ்ருடியோ ஒரே கலகலப்பாகி விடுகிறது.

இது ரஜனியின் அண்மைக்காலமாற்றமாகும். (ஒ)

## 'இதய தீபம்' படத்தில் மோகன் - ரேகா ஜோடி

மோகன்- ரேகா ஜோடியாக நடிக்கும் வண்ணப் படம் ஒன்றை பஞ்சு சினிகிரியேஷன்ஸார் தயாரிக்கிறார்கள்.

இப்படத்திற்கு ''இதய தீபம்'' எனப் பெயரிடப் பட்டுள்ளது.

இதில் நாசர், சங்கரன், சின்னி ஜெயந்த், தர்மராஜ், கோவை சரளா, விஜயசத்திரிகா இன்னும் பலரும் நடிக்கிறார்கள்

பி. நித்தியானந்தம் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். சந்திரபோஸ் இசை அமைக்கிறார்.

இதன் தொடக்கவிழா அண்மையில் பாடல் பதிவுடன் நடந்தது

படம் வேகமாக வளர்ந்து வருகிறது

## திரைப்படத்தில் இவர்கள்

சரித்திரநாயகனுன பிரெஞ்சு மன்னன் நெப்போலியன் பாத்திரம் திரைப்படங்களில் 172 தரம் நடிக்கப்பட்டது

அமெரிக்க ஜனுதிபதியான ஆப்ரஹாம் லிங்கனின் பாத்திரம் 120 திரைப்படங்களில் நடிக்கப்பட்டது.

ஜனுதிபதி ருெனல்ட் றேகன் இன்னும் ஒரு படத்திலாது ஜனுதிபதி பாத்திரத்தில் நடிக்கவில்லை

# தோடை, எலுமிச்சை தொடர்ந்து காய்க்க....

முக்கிய குறிக்கோள்:-

ஏன்காய்க்கவில்லை? தொடர்ச்சியாகக் காய்க்க என்ன செய்ய வேண்டும்? ஒரு வீட்டுத் தோட்டத்தில் உள்ள தோடை / எலுமிச்சை போன்ற கிச்சிலி இனப் பயிர்வகை தொடர்ச்சியாக வருடம் பூராவும் காய்த்துப் பலன் தர என்ன செய்யவேண்டும்? இதற்குரிய விடைகளைக் கண்டறிதல் வேண்டும்.

(1) பரிசிலனைகளும் - செயல்முறைகளும்:-

ஆராய்ந்தறிய வேண்டியன;-

அ. மரத்தினது வயது, கடந்தகாலப் பராமரிப்பு முறைகள் அதாவது 2, 3.4,5வருடங்களாயினும் அம்மரத்தின் பராமரிப்பு வரலாற்றை ஆராய்ந்தறிந்துகொள்ளவேண்டும்.

ஆ.மண்ணின்தன்மை, போதியளவு சூரிய வெளிச்சம், காற்ருேட்டம், பசளைப் பிரயோகம், தேவையான நீர்ப் பிரயோகம், பயிர் வளர்ப்புமுறை, பயிர்ப பாதுகாப்பு என்பன திருப்திகரமாக நடைபெறுகின்றனவா? என்பதையும் அவதானித்துச் செயற்படல் அவசியம்.

(2) இடவசதி:

கிச்சிலி இனத்தைப் பொறுத்தவரை குறைந்தது 12-15 அடியாவது இடைவெளி அமைத்துக் கொடுக்கவேண்டும். போதியளவு சூரிய வெளிச்சம், காற்ருேட்டம் என்பன கிடைக்கத்தக்க தன்மையில் மரத்தின் சுற்றுடல் பேணப்படல் வேண்டும்.

(3) வளர்ப்புமுறை:

அ. நிலமட்டத்தில் இருந்து 1½' - 2' உயரம் வரை உண்டாகும் கிளைகள் யாவும் வெட்டப்படல்வேண்டும்.

ஆ. பிரதான தண்டிலும், பக்கக் கிளைகளிலும் இருந்து தோன்றும் நீர்வாதுக்கள் உடனுக்குடன் கத்தரிக்கப்படல் வேண்டும். இவை பிரயோசனமற்றனவாகும்.

இ. பக்கக்கிளைகளாக படரும் கிளைகளை விட்டு ஏனையவை யாவும் கத்தரித்தல் வேண்டும்.

ஈ. காய்ந்த நோயுள்ள கிளைகள், நெருக்கமான கிளைகள், பட்டகிளைகள், உடனுக்குடன் வெட்டப்பட்டு போடோக்கலவை பரிசரணம் செய்தல் வேண்டும்.

போடோக் கலவை தயாரிப்பு:


செப்புச் சல்பேற்று (துரிசு) - 4 பங்கு.

செந்தகம் அல்லது சுண்ணும்பு - 4 பங்கு.

நீர்-200 மி லீற் இவை கொண்டு கலக்கப்பட்ட கலவையை சுத்தரித்த, காயப்பட்ட இடங்கள் யாவும் பூசவும்.

(4) பசளைப்பிரயோகம்:

அ. கிச்சிலி இனப் பயிர்ச்செய்கையில் பசளைப் பிரயோகம் மிக மிக முக்கியமானது. முதலில் மரத்தின் வயதிற்கேற்ப மரத்தின் அடியிலிருந்து 2. 3. 4, 5அடி தூரத்துக்கு 2-3அடி அகலம், 2 அடி ஆழத்துக்கு



குழிவட்டமாக வெட்டப்படல் வேண்டும். இக்குழியுள் மரத்தின் வயதிற்கேற்ப 12-15 கி.கி நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு இடவும். அதன்மேல் 2 படை பொச்சு மட்டைகளை (பொச்சு மேற்பக்கமாக இருக்கத்தக்க தன்மையில்) அடுக்கி மேற்படை மண்ணுல் மூடிவிடவும்

ஆ. கன்றடியில் அதிகளவு மண் அணைத்தல் தவிர்க்கப்படல்வேண்டும். கன்றடியிலிருந்து 1-1½ அடி தூரத்துக்கு வேர் சிதைவுறும் தன்மையில் எவ்விதமான தொழிற்பாடும் நடைபெறக்கூடாது. இச் செயல் 'பிசினிழிவு' (Gummosis) நோய்க்கு வழிகோலும்.

இ. இறந்த மிருகங்களின் உடலைப் புதைப்பதன்மூலம் மரத்துக்கு வேண்டிய சகலவிதமான போஷணைப் பொருள்களையும் சேரச் செய்ய முடியும்.

செயற்கைப் பசளைப்பிரயோகம்.

செயற்கைப் பசளைப் பிரயோகம் மிக மிக முக்கியமானது. காய்க்கும் பருவ மரத்துக்கு என்.பி.கே. 9:21:20 என்ற கலவையில் வருடத்திற்கு 1360 கிரும் என்ற ரீதியில் இடலாம்.

இதை இரண்டாகப் பிரித்து இரு தடவையில் (680 கிரும்) (காலபோகம் / சிறுபோகம்) இடவும். மேற்படி கலவை கிச்சிலி விசேட உரக் கலவையாக வர்த்தக ஸ்தாபனங்களில் விற்பனையாகின்றது. இவை கிடைக்காதபோது.

* யூறியா - 10 கி.கி.
* சுப்பர் பொசுபேட் -23கி கி.
* மீ. பொட்டாஸ் - 17 கி.கி. கொண்டு

கலந்த கலவையை உபயோகப்படுத்தலாம்.

(5) அதிர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம்

அதிர்ச்சியை இருமுறைகளில் ஏற்படுத்தலாம்.

அ மரம் வாடல்நிலை (Wilting Point) ஏற்படும் வரை வரட்சியை ஏற்படுத்தி சடுதியாக நீர்ப்பாசனம் செய்வதன் மூலம் காய்க்கத்தூண்டலாம்.

ஆ. மரத்தின் கீழ் குப்பை கூழங்களைப் போட்டு எரித்துப் புகையூட்டுவதன்மூலமும் காய்க்கத் தூண்டலாம். (நெருப்பு எரியாது புகைந்துகொண்டிருக்கத்தக்கதாக புகையூட்டல் வேண்டும்)

(6) நீர்ப்பாசனம்:

கிச்சிலி இனப் பயிர்ச்செய்கையில் கட்டுப்பாடான, வரட்சியற்ற நீர்ப்பாசனம் மிகவும் முக்கியமாகும். தொடர்ச்சியானஈரலிப்பு இருக்க வேண்டுமாயின் நீர்த்தேக்கத்தை இப்பயிரினம் அதிகம் சகிக்க மாட்டாது. ஆதலின் நீர்ப்பாசனம் மண்ணின் தன்மைக்கு அமைய 6-8 நாட்களுக்கு ஒரு தடவை செய்தல் போதுமானது. அத்துடன் மரத்தினடியில் [illegible] நீர்ப்பாசனம் செய்தல் விரும்பத்தக்கது.

(7) நுண் மூலகக் குறைபாடு தென்பட்டால்

இலைப்பரப்பு மஞ்சள் நிறமடைந்து இலைகளின் வளர்ச்சி குன்றிக்காணப்படின் இக் குறைபாடு இருக்கின்றது என அனுமானிக்கலாம். அதிக அளவு இயற்கைப் பசளை பாவித்தால் இக்குறைபாடு இலகுவில் தென்படாது. இருந்தும் அவதானிக்கப்படின் அம்மூலகங்களைக்கொண்ட கரைசல் - உ-ம், கமக்சிக் குருெப் (Max crop) அல்லது செல்போனியா, அல்லது பேபோலோன் (Bayfolan) ஆகியவற்றில் ஒன்றை 15 நாட்களுக்கு ஒரு தடவை இலைகளின் மேல் விசிறலாம். பூக்கும் போது ரெருசில் (Terracil) எனும் தூண்டு ஊட்சுரப்பியை விசிறல் மிகவும் நல்லது.

(8) பயிர்ப்பாதுகாப்பு:

கிச்சிலி பயிரினத்துக்கு சுரங்கப் புழுத்தாக்கம் (Leafminer) பெரிதும் கெடுதி ஏற்படுத்துகின்றது இதன் தாக்கத்தையும்இலகுவில் கண்டறியலாம். இதையும் இலைச் சுருட்டி போன்றவற்றையும் கட்டுப்படுத்த ஊடுருவிச் செல்லும் கிருமிநாசினி ஒன்றை உபயோகிக்கலாம். உ-ம் மொனேகுருேட்டபொஸ், அல்லது தமறேன் அல்லது அசோட்டீன்.

(9) விளைவு

மேற்சொன்ன குறிப்புக்களை அவதானித்து அவற்றைச் சரிவரக் கடைப்பிடித்து பயிர் வளர்ப்பு முறையைக் கையாளும்பொழுது கிச்சிலி இனம் வருடம்பூராவும் தொடர்ச்சியாகக் காய்க்கக்கூடும் எனப் பரிசோதனைகள் எடுத்துக்காட்டியுள்ளன.

தொடர்ச்சியாகக் காய்க்கும் ஓர் எலுமிச்சை மரத்திலிருந்து வருடமொன்றுக்கு 3000-5000 தரமான பழங்களைப் பெறலாம். தொடர்ச்சியாகக் காய்க்கும் ஒரு தோடை மரத்தில் இருந்து வருடமொன் [illegible] லான தரமானதும், [illegible] பழங்களைப் பெறமுடியும். ★

\- வை. சுப்பிரமணியம் -
(டிப்ளோமா (விவசாயம்)

# பிஜி — தெரிந்த நாடு தெரியாத விவரம்

இன்றைய பிஜி நாடு, மூந்நூறுக்கு அதிகமான தீவுகளைக் கொண்டது

டச்சு ஆராய்ச்சியாளர் ஏபல் ரஸ்மன் பிஜி பற்றி 1643 ஆம் ஆண்டில் மேற்குலகுக்குத் தெரியப்படுத்தினர்.

தென் பசுபிக்கின் 'சொர்க்கமான' இந்த நாடு பற்றி மேற்குலகு அறிந்து கொள்ள இன்னும் 150 ஆண்டுகளைக் கழிக்கவேண்டும் என்று அவர் கூறினர்.

சந்தன மரங்களுக்குப் பேர் போன நாடாக பிஜியை அக்கால ஆராய்ச்சியாளர் கருதினர். இதனுல் இத்தீவுகளுக்கு மேற்குலகைச் சேர்ந்த கப்பல்கள் படையெடுக்கத் தொடங்கின.

அப்படிக் கப்பல்களில் வந்தவர்கள் இத்தீவில் நிரந்தரமாக தங்கத் தொடங்கினர்.

தீவின் பழங்குடிகளான மெலேனிஸியன்களுக்கும் கப்பல்களில் வந்து தங்கியவர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை மூண்டது.

சண்டை அதிகரிக்கவே பிரிட்டன் தலையிட்டது. 1874 ஆம் ஆண்டில் பிரிட்டன் பிஜியைத் தனதாக்கியது.

ஐந்து ஆண்டுகள் கழித்து பிரிட்டன் இந்தியத் தொழிலாளர்களை பிஜிக்குக் கொண்டு வந்தது.

அதைத் தொடர்ந்து இந்தியர்களின் சனத்தொகை, பழங்குடியினருக்குச் சமமாக அதிகரித்தது.

இரண்டு இனங்களும் மற்றும் சிறிய இனங்களும் தீவின் அபிவிருத்திக்காக ஒற்றுமையாகப் பாடுபட்டனர்.

1970 இல் பிஜி சுதந்திரம் பெற்றது. விவசாயம், கரும்பு ஆகியன பிஜியின் பிரதான வருமானம் விவசாயம், கரும்புச்செய்கை ஆகியவற்றினுல் கிடைத்து வந்தது. மூன்றில் இரண்டு பங்கு வெளிநாட்டுச்செலாவணியை இவை பெற்றுக் கொடுத்தன.

1986 இல் அமெரிக்காவில் உள்ள 'பிரீடம் ஹவுஸ்' என்ற நிறுவனம் பிஜியை ஒரு சுதந்திர நாடாகக் கணித்தது.

1980 இல் பழங்குடிகளுக்கும் இந்திய வம்சாவழியினருக்கும்இடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படத் தொடங்கின.

இதற்குக் காரணம் பழங்குடியினரிலும் பார்க்க இந்திய வம்சாவழியினரின் எண்ணிக்கை அதிகரித்ததே.

1987 இல் இந்திய வம்சாவழியினரின் [illegible]




கம் கூடிய அரசு பதவி ஏற்றது. அதைத் தொடர்ந்து ஏப்ரலில் பழங்குடிகளின் ஆதரவுடன் கூடிய இராணுவப் புரட்சி ஏற்பட்டது.

இந்தியர்களின் ஆட்சி அதிகாரம் பறிக்கப்பட்டது பழங்குடியினருக்கு ஆட்சி அதிகாரம் வழங்கக் கூடியதாக அரசமைப்புத் திருத்தப்பட்டு குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. காமன்வெல்த் அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை, அணிசேரா இயக்கம் ஆகிய ஸ்தாபனங்களில் பிஜி அங்கம் வகிக்கின்றது.

ஏனைய புள்ளி விவரங்கள் வருமாறு;

தலைநகரம்: சுவா (சனத்தொகை சுமார் 68,000)

விஸ்தீரணம்: 322 தீவுகள், 7,078 சதுரமைல்கள்.

சனத்தொகை: 714,000.

பழங்குடிகள்: 330.000

இந்தியர்கள்: 347 000

ஏனைய இனங்கள்: 37, 000

சனத்தொகை அதிகரிப்பு: 1 9 சதவீதம்.

மொழிகள்: ஆங்கிலம் (உத்தியோகமொழி), உருது, ஹிந்தி, பிஜியன், சீன.

மதங்கள்: கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம், கொன்பியூசியன்.

டாக்டர்கள்: 2,180 பேருக்கு ஒரு டாக்டர்.

ஆஸ்பத்திரி: 355 நோயாளருக்கு ஒரு படுக்கை வீதம்.

தினசரி பத்திரிகைகள்: இரண்டு.

வானெலி: இருவருச்கு ஒன்று வீதம்.

கல்வி: சகல குழந்தைகளும் ஆரம்பக்கல்வி பெறுகின்றனர். 74 சதவீதமான மாணவர்கள் கனிஷ்ட தரக் கல்வி பெறுகின்றனர். ஒரு லட்சம் பேருக்கு 352 பேர் பல்கலைக்கழகக் கல்வி பெறுகின்றனர்.

கல்விக்கான செலவு: தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 11.3 சதவீதம் கல்விக்குச் செலவிடப்படுகின்றது.

பொருளாதாரம்: விவசாயம், பிரதானமாக கரும்புச் செய்கை, கொப்பரா, மிருக வளர்ப்பு, காடுவளர்ப்பு, உல்லாசப்பயணத்துறை, தங்கச் சுரங்கம்.

பாதுகாப்பு: இராணுவப்படை சுமார் 2,500 வீரர்கள், கடற்படை 160 வீரர்கள்.

கரன்ஸி: பிஜிடாலர்.

வயது: சராசரி ஒருவர் 65 வயதுவரை உயிர் வாழ்கின்றனர்.

படிப்பறிவு: 76 சதவீதமானேர் படிப்பு வாசனையுள்ளவர்கள்.

குழந்தை மரணம்: ஆயிரத்துக்கு 56 குழந்தைகள் இறக்கின்றன.★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூடைக்காரியின் மகள்

- ஜெகசிற்பியன் -

ஆபீஸ் மனேஜரின் வசவுகளுக்கு ஆளாகும்படி தன் கணவனை அரை மணி நேரம் தாமதமாக அனுப்பிவைத்துவிட்டு 'ஹாய்'யாகவந்து கூடத்தில் அமர்ந்தாள் பார்வதி.

துரிதகதியில் சமையல் வேலை நடந்ததற்கு அறிகுறியாக தட்டுமுட்டுச் சாமான்கள் மூலைக்கொன்றாய்த் திறந்தும் கவிழ்ந்தும் கிடந்தன. இத்தனைக்கும் காரணமான அந்தக் காய்கறிக்காரி கருப்பாயியை நினைத்தபோது பார்வதியின்முகம் சினத்தால் சிவந்தது.

கருக்கலோடு காய்கறிக் கூடையுடன் ஓசையாகக் குரலெழுப்பிக் கொண்டே நாள் தவறாமல் வந்து போகும் கருப்பாயி அன்று ஏனோ வரவில்லை. வாடிக்கையாக அவளிடம் காய்கறி வாங்கும் பார்வதி. அவள் வருகையை வழிமேல்விழிவைத்துப்பார்த்துப்பார்த்து நோத்தைப் போக்கிவிட்டாள் முடிந்ததும் பையைத் தூக்கிக்கொண்டு மார்க்கெட்டுக்குப் போகும் பழக்கம் ஈஸ்வரமூர்த்திக்கோ பார்வதிக்கோ இன்னும் ஏற்படவில்லை. அவர்கள் புதுக்குடித்தனம் ஆரம்பித்திருப்பவர்கள். யதார்த்த வகையறாக்களுக்குக் கருப்பாயியை நம்பிக் கிடப்பவர் கள் அவர்கள்.

பழுக்காத பச்சைக் காய்கறிகளை விற்கும் கருப்பாயி பழுத்தகிழம், அவளுக்கு வயது ஐம்பத்தைந்துக்குக் குறைவாது கோடாம்பாக்கத்திலேயே கொட்டை போட்டு வளர்ந்தவள். சுமார் இருபது வருஷமாகக் காய்கறி விற்ற அவள் ஜீவனம் நடத்தி வருகிறாள். கூடைசுமந்து சுமந்து தலைகூடப் பொட்டலாகிவிட்டது. ஆனால், இந்தக்காய்கறி வியாபாரத்தில் இன்னும் கொஞ்சம்கூடச் சலிப்பேற்படவில்லை. அதெப்படி முடியும்? அவள் தன் உயிர்மீது இன்னும் சலிப்புக் கொள்ளவில்லையே! கல்யாணமான நான்காவது வருஷம், கையில் இரண்டு பெண்ணாய்ப் பிறந்த குழந்தைகளை வைத்துக்கொண்டு கணவனைப் பறிகொடுத்து விட்டாள் கருப்பாயி. அன்றைக்கு ஆரம்பித்த இந்தத் தொழில்தான் இன்றுவரை வளையும் அவள் பெண்களையும் பசியின்றி காப்பாற்றிவருகிறது இதுமட்டுமா? காய்கறி விற்றே மூத்த பெண் முனியம்மாளுக்குக் கல்யாணமும் செய்துவிட்டாள் கிழவி. அடுத்த பெண்ணுக்கும் செய்துவிட்டால் நிம்மதியாக அவள் கண்ணை மூடிவிடலாம்.

கோடம்பாக்கத்திலுள்ள ஒவ்வொரு வீட்டு எஜமானிக்கும் கிழவி கருப்பாயி நன்கு அறிமுகமானவள். அந்தவட்டாரத்திலுள்ள எல்லா வீட்டுப் பெண்களும் அவளிடம் வாடிக்கை வைத்துக்கொண்டிருந்தனர். கிழவியின் இனிய சுபாவமும் தாராளப் போக்கும் அவர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. என்னதான் காற்று, மழை, குளிராய் இருந்தாலும், விடியற்காலையில் பச்சைப் பசுமையான புதிய காய்கறிகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய்விடுவாள் கருப்பாயி.

பார்வதிக்கும் கிழவி கருப்பாயியை ரொம்பவும் பிடித்துவிட்டது. விடியற்காலையில் எழுந்து மார்க்கெட்டுக்கு ஓடவேண்டிய சிரமம் குறைந்ததற்காக ஈஸ்வரமூர்த்தியும் கருப்பாயியைப் பிரமாதமாகப் புகழ்ந்தான்.



கிழவி கருப்பாயி, பார்வதியிடம் மிகுந்த வாஞ்சையாக இருந்தாள். சின்னஞ்சிறுசுகள் சேர்ந்து தனிக்குடித்தனம் நடத்துவதால் அவளுக்கு அவர்கள்மேல் அத்தகைய பரிவும் பாசமும் ஏற்பட்டிருந்தது. பச்சைப்பசேலென்ற பிஞ்சுக் காய்கறிகளைப் பார்வதிக்கெனத் தனியாக எடுத்துவந்து அளவுநிறை பாராமல் கொடுப்பாள். தெருவெல்லாம் சுற்றியலைந்து காய்கறிகளை விற்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பும்போது பார்வதியிடம் வந்து சிறிது நேரம் எதைப்பற்றியாவது பேசிக் கொண்டிருந்து விட்டுப்போவாள். கணவன் ஆபீஸுக்குப்போன பிறகு வீட்டில் தனியாகக் கொட்டுக்கொட்டென்று குந்திக்கிடக்கும் பார்வதிக்கு, கிழவியிடம் வாயாடிக்கொண்டிருப்பதில் சற்று ஆறுதலாயிருக்கும். அப்போதெல்லாம் கிழவி கருப்பாயி, தன் குடும்பத்தைப் பற்றிய வரலாறுகளையும், தன் மூத்த மகள் வாழ்க்கைப்பட்டிருக்கும் இடத்தைப்பற்றியும், இளைய மகளின் கல்யாண விஷயம் பற்றியும் உப்புச்சப்பில்லாமல் பலவும்பேசிக் கொண்டிருப்பாள்.

தன் மருமகன் வீரப்பனைப்பற்றிய பேச்சுவந்தால் கிழவி ஆத்திரமாகவும், வெறுப்பாகவும், சலிப்பாகவும்பேசுவாள். அவன் தன் அருமை மகளைப் படுத்தாத பாடெல்லாம் படுத்துவதாகக் குறைபட்டு அழுவாள்- கிளிபோல் வளர்த்த தன்பெண்ணை, முன்பின் யோசியாமல், நல்லது கெட்டது விசாரிக்காமல், பூனைபோன்ற வீரப்பனிடம் பிடித்துக் கொடுத்துத் தீராத கவலையை விலைக்கு வாங்கிக்கொண்டதாகக் கூறி வெதும்புவாள். பார்வதிக்குஇவற்றைக்கேட்க ரொம்பவும் சுவாரஸ்யமாக இருக்கும்; பரிதாபமாகவும் இருக்கும்.

கிழவி கருப்பாயி சென்ற இரண்டு வாரங்களுக்குமுன் ஒருநாள், கலங்கிய கண்களுடன் பார்வதியிடம் வந்து கொஞ்சமும் எதிர்பாராத அந்தச் செய்தியைச் சொன்னாள். அதாவது, அவளுடைய மூத்த மகள் முனியம்மாள் விஷஜுரம் கண்டு இறந்து போனாளாம்!

''அந்தப் பாவிப்பயல் வீரப்பனின் கொடுமையைத் தாளமாட்டாமலேயே என் அருமை மகள் இறந்துபோனாள்'' என்று கதறிப்புலம்பினாள் கிழவி. வீரப்பனை வாயில் வந்தபடியெல்லாம் வசைபாடினாள். அவன் செய்த அநியாயங்களையெல்லாம் எடுத்துச்சொல்லி அழுது தீர்த்தாள். பார்வதிக்குச் சொல்லொணா வேதனையாகிவிட்டது. தனக்குத் தெரிந்த ஆறுதல் மொழிகளைக் கூறி கிழவியைச் சமாதானப்படுத்தினாள். ''போனவள் போகட்டும்; வீட்டிலிருக்கும் இளைய பெண்ணையாவது ஒரு நல்ல இடத்தில் ஒரு நல்ல வரனைப் பார்த்துச் சீக்கிரமாகக் கட்டிக் கொடுத்துவடு'' என்று புத்திமதி சொல்லி அனுப்பினாள்.

அன்று முதல் கிழவி கருப்பாயி சரிவரக்காய்கறி விற்கவருவதில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கொருமுறை வருவாள். யாரும் விரும்பாத முற்றிக்காய்ந்த காய்கறிகளைக்கொண்டு வருவாள். அவற்றை விற்றுக்காசாக்க முடியாமல் அப்படியே திருப்பி எடுத்துக்கொண்டு போய்விடுவாள்.

கிழவி கருப்பாயி கடந்த மூன்று நாட்களாக அந்தப் பக்கமே வரவில்லை. பார்வதியின் பாடு பரமசங்கடமாகிவிட்டது. மோரும் ரசமும் மாங்காய் ஊறுகாயுமாக எத்தனை நாளைக்கு- எத்தனை வேளைக்குச் சாப்பிட்டுத் தொலைப்பது?

இன்று யதார்த்தத்துக்கு ஒருகாயோ, கீரையோ, கிழங்கோ எதுவும் இல்லாமல் அல்லாடிவிட்டாள்பார்வதி. இன்றைக்கு எப்படியும் கிழவி கருப்பாயி கறிகாய் கொண்டு வந்துவிடுவாள்; எதுவாயிருந்தாலும் மூன்று நாளைக்கு வரக்கூடிய காய்கறிகளை மொத்தமாக வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். கிழவி இன்றைக்கும் வரவில்லை. சோற்றை வடித்துப் பருப்பை வேகவைத்துக் கொண்டு, யதார்த்தத்துக்கு ஒன்றுமில்லாமலே இலையைப்போட்டாள்.

ஈஸ்வரமூர்த்தி எள்ளுருண்டையாய்க் குதித்து, புழுவாய்த் துடித்து, வெந்ததும் வேகாததுமாக வாரிக்கொட்டி இரண்டு கவளம் வயிற்றில் அடைத்துக்கொண்டு ஆபீஸுக்குப் பறந்தே போய்விட்டான்.

மணி பதினொன்று.

சஞ்சீவி சிறுகதை

பார்வதிக்குப் பசி எடுத்தது. சாப்பிடலாம் என்றுஎழுந்தாள். வராந்தாவில், ''அம்மா!'' என்ற குரல் கேட்டது.

கிழவி கருப்பாயிதான் வந்திருந்தாள்.

பார்வதிக்குக் கோபம் அதிகமாயிற்று. வேகமாக வெளியே வந்தாள். அங்கே தன் பொக்கை வாயைத் திறந்துகாட்டிச் சிரித்தபடி நின்றிருந்தாள் கருப்பாயி. அவளைவிட்டு என்றுமே பிரிந்திராத அவளது காய்கறிக்கூடை இன்று அவளிடம் இல்லை.

''என்ன, கருப்பாயி! எங்கே இப்படி வந்தே?'' என்று தன் கோபத்தை அடக்கிக் கொண்டு சாதாரணமாகக் கேட்டாள் பார்வதி.

''ஒண்ணுமில்லே!...... அம்மாளிடம் ஒரு நல்ல சேதியைச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்று இழுத்தாள் கருப்பாயி.

'என்ன சேதி?' என்று கேட்டுக்கொண்டே வராந்தா கட்டைச் சுவரின் மேல் போய் உட்கார்ந்தாள் பார்வதி.

''என் இளையப் பொண்ணு அஞ்சலைக்கு வருகிற வெள்ளிக்கிழமை கண்ணாலம் அதைச் சொல்லிப்பிட்டுப் போவத்தான் வந்தேன்'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள் கிழவி.

'சின்னப் பெண்ணுக்குக் கல்யாணமா? ரொம்பச் சந்தோஷம். இவளுக்காவது நல்ல மாப்பிள்ளையாகத் தேடினயா? அல்லது மூத்த மருமகன் வீரப்பனைப் போல...''

இதைக் கேட்டதும் கிழவி கருப்பாயியின் கண்கள் திடீரெனக் கலங்கின.

''அந்தப் பாவிப்பய வீரப்பனுக்குத்தான் அஞ்சலையை இரண்டாந் தாரமாகக் கொடுக்கிறேன் அம்மா!'' என்று குரல் கம்மக் கூறினாள் காய்க்கறிக்காரி கருப்பாயி.

பார்வதிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை!

*

# 'வாள்' - கண்டவரையே கொல்லும்; 'நா'வோ காணாதவரையும் கொல்லும்!

கொல்லா நலத்தது
நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது
சால்பு.

இக்குறள் சான்றாண்மை என்னும் தலைப்பின்கீழ் வந்தது. சான்றாண்மை என்பது தமிழகத்தின் சொந்தச் சொத்து. அது எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியாத ஒன்று. சான்றாண்மை என்பது பல நல்ல குணங்கள் அமையப் பெற்ற ஒருவன், அக்குணங்களில் எதுவும் தன்னை விட்டுப் பிரிந்து போய் விடாமல் காப்பாற்றி வரும் ஆண்மை எனப்படும். ஆகவே, சான்றாண்மை என்பது உயர்ந்த மக்களின் சிறந்த பண்பு என்றாகிறது.

மக்களின் உயர்ந்த பண்புக்குப் பல நற்குணங்கள் இருந்தே தீர வேண்டும். எது இல்லாவிடினும் இருபெருங் குணங்களேனும் வேண்டும். அவற்றுள் ஒன்று, பிற உயிர்களைக் கொல்லாமை; மற்றொன்று பிறர் தீமைகளைச் சொல்லாமை என்று இக்குறள் கூறுகிறது.

சான்றாண்மைக்குத் திருவள்ளுவர் சொல்லில் ஒன்றும் செயலில் ஒன்றும் விரும்புகிறார் என்பதையும் இக்குறளால் அறிந்து மகிழ்கிறோம், உயிரைக் கொல்லாமையும் தீமையைச் சொல்லாமையும் ஆகிய இவ்விரண்டும் ''நலம் தரும்'' என்று வள்ளுவர் இக்குறளில் குறிப்பிடுகிறார். இதனை 'நலத்தது' என்ற சொல்லால் அறிகிறோம்.

கொலையுண்ட உயிர்களும் சொல்லுண்ட உயிர்களும் பெரிதும் துன்பப்படும். ஆதலின் அப்படிச் 'செய்யாதிருப்பதே எவ்வுயிர்கட்கும் நல்லது என்பது இக்குறளில் உள்ள 'நலத்தது' என்ற சொல்லின் கருத்து.

கொல்லுகின்றவனைத் தீய செயலாளன் என்றும் சொல்லுகிறவனை சொல்லாளன் என்றும் உலகத்தவர் சொல்லிப் பழித்து வெறுத்து ஒதுக்குவர். ஆதலின் கொல்லாமையும் சொல்லாமையும் பிறருக்கன்றித் தனக்கு நல்லது என்ற கருத்தும் இக்குறளில் அடங்கியே இருக்கிறது.

உயிரைக் கொல்லாமை, தீமையைச் சொல்லாமை ஆகிய இரண்டையும் நலத்தது என்று ஒரு சொல்லால் ஒற்றுமைப்படுத்திக் கூறியிருப்பதுஎண்ணிஎண்ணி வியக்கக் கூடிய ஒன்று.

கொல்லா நலத்தினை 'நோன்பு' என்றும தீமை சொல்லா நலத்தினைச் 'சால்பு' என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுகிறார். இக்குறளில் உள்ள இச்சொற்கள் பொன்னிற் பதித்த மணிகள் என மின்னிக் கொண்டிருக்கின்றன.

நோன்பு என்பதை விரதம் என வடமொழியாளர் கூறுவர். அது 'குறிப்பிட்ட சில நாட்களில் இதை நான் செய்வதில்லை' என்பதும் 'நான் விரும்புவதைப் பெறும் வரையில் இவ்வாறு இருப்பேன்' என்பதும் ஆகும். புரட்டாதிச் சனிக்கிழமைகளில் மட்டும் புலாலுண்பதில்லை என்பதும் திருப்பதிக்குப்போகும்வரை முடி எடுப்பதில்லை என்பதும் நோன்பு என்பதின்பாற்படும்.

ஆனல் 'சால்பு' என்பது குறித்த குறித்த நாளில் குறிப்பிட்ட ஒன்றினைச் செய்யாதிருக்கும் நோன்பினைச் சுட்டாது. அது என்றும் நின்று நிலவி இயல்பாகவே அமைந்திருக்கின்ற ஓர் உயர்ந்த பண்பையே சுட்டிக் காட்டுவதாகும்.

நோன்பின் தன்மையையும் சால்பின் தன்மையையும் அறிந்து கொண்ட நமக்கு இக்குறள் நோன்பைவிடச் சால்பு உயர்ந்தது என்று வற்புறுத்துவதாகத்தெரிகிறது.

இன்று திருவள்ளுவர் குருபூஜை, இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது

நோன்பைவிடச்சால்பு உயர்ந்தது என்று இக்குறள் கூறுவதிலிருந்து, உயிர்களைக் கொல்லாதிருப்பதைவிடத் தீமைகளைச் சொல்லாதிருப்பது தான் உயர்வு என்பது வள்ளுவர் கருத்து என விளங்குகிறது.

சான்றாண்மைக்கு இலக்கணம் கூற வந்த வள்ளுவர் அதற்குஇருக்க வேண்டிய பல நல்ல குணங்களுடன் கொல்லாமையும் சொல்லாமையும் வேண்டும் என்று மட்டும் இக்குறளில் கூறவில்லை. பின்னதற்கு முன்னதை ஒப்புமநாகும் உவமையாகக்கூடக் கூறியிருக்கிறார் என்பதை அறியும்பாது நமது உள்ளம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

கொல்லுவதற்குரிய கருவி கிடைக்கப் பெறாத ஒருவன் கொல்லாது இருந்துவிடவும் முடியும். அது எளிது. ஆனால் சொல்லுவதற்குரிய ''நா'' இருந்தும், அதனை அடக்கி ஆண்டு கட்டுப்படுத்திச் சொல்லாதிருப்பதுதான் அரிது. ஆதலின் கொல்லாச் செயலைவிடத் தீமை சொல்லாச் செயலை இக்குறள் உயர்வு படுத்திக் கூறுகிறது.

கொல்லுங் குணத்தை விட, தீமை சொல்லும் குணத்தைக் கொடுமையாகக் கூறியிருப்பது கொலையுண்டவன் அப்போது மட்டும் துடிதுடித்துச் சாகிறான்; ஆனல் சொல்லுண்டவன் வாழ்நாள் முழுவதும் துடிதுடித்துச் சாகிறான் என்பதன் பொருட்டு எனத் தெரிகிறது.

கொலை வாளினும் கொடியது நாக்கு எனலாம். வாள் மனிதனை விட்டுச் சில பொழுதேனும் பிரிந்திருக்கும். நா எப்பொழுதும் மனிதனுடனேயே இருந்து வரும். வாளால் சிலரையே வதைக்க முடியும். நாவால் பலரை வதைக்க முடியும். ''வாள்'' கண்டவரையே கொல்லும். 'நா' காணாதவரையும் கொன்றுவிடும், ஆகவே வாளினும் வலிமை உடையது 'நா' என்பது வள்ளுவர் கருத்து.

நாவினாற் சுட்டு வடுவை உண்டாக்குவதைவிட தீயினாற் சுட்டுப் புண்ணை உண்டாக்குவது நல்லது என்று முன்பு ஒருமுறை கூறினார். தீமையைச் சொல்லிப் பலநாள் துன்புறுத்தும் கொடுமையைவிட [illegible] நாள் துன்புறுத்தும் [illegible] இக்குறளில் கூறுகிறார். இக்கருத்து நம் உள்ளத்தைச் சுடுகிறது.

''பெற்றவர்கள் பிள்ளைகளின் குறைகளையும் உற்றவர்கள் நண்பர்களின் குறைகளையும் எடுத்துக் கூறாமல் இருக்கலாமா? இருந்தால் அவர்கள் திருந்துவது எப்படி?'' என்று நாம் வள்ளுவரைக் கேட்டால் அவர், ''நன்றாக எடுத்துக் கூறுங்கள்; மக்களின் குறைகளை எடுத்துக் கூறித் தம்மக்களை அறிவுடையவர்களாக்குங்கள். அதுதான் தந்தையின் கடன். நண்பர்களின் தவறை அழ அழச் சொல்லி மட்டுமல்ல; இடித்து இடித்துக் கூறுங்கள். அதுதான் நட்பு. நான் கூற வந்தது அவர்களை அல்ல; உற்றாரும் நண்பரும் அல்லாத பிறரை'' என்று வெகு நயமாகக் கூறுகிறார். இவ்வுண்மையை இக்குறளில் உள்ள 'பிறர்' என்ற சொல் வெகு அழகாக நமக்கு அறிவித்துக் கொண்டு இருக்கிறது.

தீமை என்ற சொல் இக்குறளில் ஆட்சி புரிகிறது. அதற்குத் தவறு என்பதோ குறை என்பதோ பொருளாகாது. இது பழிபாவங்களுக்கு அஞ்சாத கொடும் செயல் என்றே பொருள் படும். வள்ளுவர் இதனைக்கருத்திற்கொண்டே, ''பிறர் குறையை'', ''பிறர் தவறை'' என்று கூறாமல் ''பிறர் தீமையை'' என்று அழுத்திக் கூறியிருக்கிறார் என்று [illegible] ★

கி. ஆ. பெ. விஸ்வநாதம்
(முத்தமிழ்க் காவலர்)

# கண்ணதாசனின் சில சுருதிகள்

பரந்தாமா!

என்னால் மோகனம் பாட முடியவில்லை. முகாரி பாடவும் சக்தியில்லை.

இரண்டுக்கும் இடைப்பட்ட சஹானா லயத்தில் சில சுருதிகள்.

சோகத்தின் உச்சியைத் தொட்டு விட்டவனுக்கு விரக்தி அடிநிலை.

இன்பத்தின் உச்சியில் அமர்ந்திருப்பவனுக்கு சுகமே லயம்.

இரண்டும் இல்லாமலும், ஆனல் இரண்டும் இருப்பது போலும் இடைத்தட்டில் வாழ்பவனுக்கு எது லயம்?

நான் யானைதான் என்பது எனக்குத் தெரிந்து விட்டால், மரக்கிளைகளை முறித்து இலைகளைச் சாப்பிடுவேன்.

அல்ல; எறும்புதான் என்பது புரிந்து விட்டால், ஒரு அரிசிமணி எனக்குப் போதும்.

சில நேரங்களில் நான் யானை என்று நினைக்கிறேன்.

ஒரு மணி அரிசி எனக்குக் கிடைக்கிறது. சரிதான்; நாம் எறும்புதான் போலும் என்று முடிவு கட்டுகிறேன்.

ஒரு மரக்கிளையே என்னை நோக்கி வருகிறது.

குளிர் காலத்தில் தேநீர் கேட்கிறேன்; ஐஸ் கிடைக்கிறது!

கோடை காலத்தில் ஐஸ் கேட்கிறேன், தேநீர் கிடைக்கிறது!

சக்தியற்ற நேரத்தில் ரம்பையையும், சக்தி மிக்க நேரத்தில் தாடகையையும் நான் சந்திக்கிறேன்.

மதுவருந்தும் நேரத்தில் அற்புதமான சிந்தனைகள் தோன்றுகின்றன.

அப்போது என்னால் எழுத முடிவதில்லை. எழுத வேண்டுமென்று அமரும்போது சிந்தனைகள் தோன்றுவதில்லை.

அற்புதமான கருத்துக்களை மக்கள் என்னிடம் எதிர்பார்க்கும் போது, நான் உளறுகிறேன்.

உளறப் போகிறேன் என்று அவர்கள் எதிர்பார்க்கும்போது, நான் அற்புதமாகப் பேசுகிறேன். ✱

# செப்பு மொழிகள்

கடல் நீர் மட்டும் உப்பாக இல்லா லிருந்திருந்தால், உலகத்தில குடிதண்ணீர் பிரச்சினையே இல்லாமல் போயிருக்கும். அவ்வளவு சுலபமாக வாழ ஆண்டவன் விடுவானா? மனிதனது உழைப்பையும் முயற்சியையும் தூண்டி விடுவதற்கே கண்ணில் கண்ட நீரை உப்பு நீராகவும், மண்ணுக்கடியில் உள்ள நீரை நல்ல நீராகவும் ஆண்டவன் படைத்திருக்கிறான்.

# நாளை வருவானோ நாயகன்?

வேலை மினைக்கெட்டு வேலையும் கைவிட்டுக்
காட்டிலலைந்தாண்டி - வண்ண
வாலைக் குறமகள் வள்ளி என்ற பெண்ணின்
காலைப் பிடித்தாண்டி! - அவன்
சேலைத் தலைப்பினைச் சுற்றிச் சுற்றிவந்து
சேட்டைகள் செய்தாண்டி - அதி
காலை முதலந்தி மாலை கடந்துமக்
கள்ளியி னோடலைந்தான் - மலர்ச்
சோலைக் குள்ளே நினை மாவுக் கென்றே அவன்
சோரமும் போனாண்டி! - கொடும்
பாலை என எந்தன் உள்ளம் கொதிக்குது
பாலபபருவத்திலும் - அவன்
காலை வாருகிற கள்ளக் குணங்களைக்
கொண்டவன் கேட்டிருந்தும் - மங்கும்
மாலைக் கண்கொண்டவன் போல மயங்கினேன்
மாயன் மருகனிடம் - நாளும்
நாளைக் கென்நாயகன் வந்திடு வானென்று
நம்பிநம்பிச் சலித்தேன் - நூறு
ஓலையும் ஆயிரம தூதும் அனுப்பினேன்
ஒன்றும் உணராமல் - இந்த
ஏழை படுந்துயர் எல்லாம் அறிந்தவன்
ஏதும அறியான்போல் - பெரும்
வேலை புரிகிறான் வாழ்ந்திடப் போகட்டும்
வாழட்டும் வாழட்டுமே.

- ரகு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசியல்

# சிங்கார வல்லிகள் தியாகமுலாம் பூசுவதா?

## நாஞ்சில் மனோகரன் கண்டனம்

இன்றைய தமிழகத்தில் மத்தாப்பு வெளிச்சத்தில் மந்தகாச வாழ்வை நடத்தி, அத்தகைய வாழ்வுக்கு தியாகமுலாம் பூசும் சிங்காரவல்லிகள் புகுந்து இருப்பதாக நாஞ்சில் மனோகரன் எச்சரித்து இருக்கிறார்.

### நிரந்தரத்தன்மை

தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சில் மனோகரன் வெளியிட்டு இருக்கும் அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

கவர்ச்சி அரசியலின் பின்னுலோ, அல்லது கண்ணீர் அரசியலின் வழிமுறையை பின்பற்றியோ கொள்கை வழி வளர்ந்த தமிழகம் செல்ல முயலுமானால் 'இருள்சப்பிய தமிழகம் இறுதிவரை' என்ற நிலைக்கு துரத்தப்படு என்பதை பணிவன்போடு தமிழக மக்களுக்குத் தெரிவிப்பதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

கவர்ச்சிக்குச் சண நேர ஆயுள் கண்ணீருக்குக் காய்ந்து போகும் திறமை அதிகம். நிரந்தரத்தன்மை நிச்சயமாகக் கொள்கை வழிக்கே இருக்க முடியும்.

### கடந்தகால வரலாறு

இன்றல்ல-கடந்தகால காங்கிரஸ் கட்சியின் வரலாறு, லட்சிய வரலாற்றில் எங்கும் நிறை

தமிழக அரசியல் செய்திகளைத் தொகுத்துத் தருபவர் சென்னையில் உள்ள எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன்.

நாதம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறும் அதுவே தான்.

காலம் களங்கப்பட்டுப் போயிற்று? அல்லது களங்கத்தை காலம் சவ்விக் கொண்டதா? தமிழகம் இந்தக் கேள்விக்குப் பதில் கண்டாக வேண்டும்.

### லட்சிய பேரிகை

பந்தபாசங்களைப் பள்ளத்தாக்குகளுக்கு அனுப்பிவிட்டு, இலை உதிர் காலம் எனும் நிலை வந்தாலும் சரி வாழ்வின் மாலை நேரம் வரை இருளில் -இடறில் மாட்டிக் கொண்டாலும் லட்சிய பேரிகை முழங்கித் தங்களது நெடுவாழ்வின் பெரும் புகழைச் சாவில் நட்டவர்கள்' கடந்த காலத்தில்!

மத்தாப்பு வெளிச்சத்தில் மந்தகாச வாழ்வை நடத்தி, அத்தகைய வாழ்வுக்கு தியாக முலாம் பூசும் சிங்கார வல்லிகளின் திருமுனைப்பு இப்போது!

### பட்டுப்போயிற்று?

உடல் உழைப்பு-தியாகம் - பட்டினி பஞ்சம் எனும் பாம்பு தீண்டினுலும் கவலையில்லை. கொண்ட இதயத்திலே ஏந்திய உணர்வுகளுக்கு, தலைமைக்கு என்னை நான் இழக்கத் தயார் என்ற இதம் தரும் உணர்வு பட்டுப் போயிற்று?

பகட்டுகளுக்கும், பளபளப்புகளுக்கும் துளி கூட அரசியல் தொடர்பற்றவர்களுக்கும், நெடுங்கால பாரம்பரியத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று என்னைப் போன்றவர்களால் பாராட்டி வரவேற்கப்பட்ட நெடுமரங்கள், குறிப்பிட்ட 'பால்கனி' களின் சேலை துவைக்கும் முயற்சியில் ஒருவேளை ஈடுபடுவார்கள் என எண்ணித்தான் 'ஏ! தாழ்ந்த தமிழகமே!' என அறிஞர் அண்ணு விழிநீர் சிந்தி விளித்தார்.

தியாகங்கள், விழுப்புண்கள் ஏளனப் பொருளாக்கப்படுவதற்கு 'ரத்தம் நீரைவிடக் கெட்டியானது' என்ற உணர்வில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முயலக் கூடாது.

நான் 'இந்து' எனச் சொல்லிடும் உரிமை சந்திடபதற்கு உரியதல்ல.

நான் 'இந்திய துரித வண்டி, எனக் கூறி டீசலுக்குப் பதிலாகக் கரியைப் பயன்படுத்துவோர் நிலைமை காரணமாக, தன்னிலை காரணமாக முன்வருவதைப் பற்றி கவலைப்படாதவன் நான்.

என்னும் பாரம்பரிய பண்பாடுகள், நிர்ப்பந்தம் காரணமாக 'ரத்தம் நீரை விடக் கெட்டியானது' என்ற உணர்வில் இயங்க முற்படுவது, காப்பாற்றிக் கொள்வதற்காக ஜனநாயகத்தின் குரல்வளையையே நெரிக்கத் தயங்காதவர்கள் என்றே கருதத் தோன்றும்.

## மாஜி மந்திரிகள் கைதாவார்கள்?

"மத்திய அரசுடன் ஜெயலலிதா தொடர்பு கொண்டு சில மாஜி மந்திரிகளைக் கைதுசெய்யத் திட்டமிட்டு இருக்கிறார்" என்று மாஜி மந்திரி முத்துசாமி கூறினார்.

அ தி. மு. க. ஜானகி அணியின் செயல் வீரர்கள் கூட்டம் ஒன்று மதுரை ரீகல் திரையரங்கில் நடந்தது. கூட்டத்தில் முத்துசாமி பேசியதாவது;

சட்டசபையில் மெஜாரிட்டியை நிரூபிக்கும் போது கடைசிநேரத்தில் ராஜீவ்காந்தி நம்மைக் கைவிட்டு முதுகில் குத்தி விட்டாலும், இங்கு ராஜீவுக்கு சமமான லட்சக்கணக்கான தொண்டர்களைப் பார்க்கிறேன்.

இன்று அண்ணன் எம் ஜி.ஆர்.நம்மிடையே இல்லாததால் அண்ணி ஜானகியை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. நாவலர் ஆனுலும் சரி, பண்ருட்டி இராமச்சந்திரன் ஆனுலும்சரி. நம்அணிக்கு வந்தால் அவர்களைத் தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். எம் ஜி.ஆர் பேர் சொல்லி அவருடைய கட்சிக்கு ஓட்டுக்கேட்க வேண்டும் என்ற கொள்கையில் உள்ள எந்த அ. தி. மு.க. தொண்டனும் வேறு எந்த கட்சிக்கும் ஆதரவு தர மாட்டான்.

மாநில அரசை மத்திய அரசு தனது கையில் வைத்துக் கொண்டு மிரட்டி வருகிறது. இந்த சமயத்தில் எந்த நேரத்திலும் கஷ்டங்கள் வரலாம். நம் தொண்டர்கள் 6 மாத காலத்திற்கு சிரமங்களை ஏற்று இராணுவத்தைப்போல் ஒருமித்து செயல்படவேண்டும்.

புரட்சித் தலைவர் மறைந்ததும் "எனக்கு இருந்த நிர்ப்பந்தம் விலகியது" என்று ஜெயலலிதா ஏன் கூறினார்? எம். ஜி. ஆர். இருந்தது ஜெயலலிதாவுக்கு நிர்ப்பந்தமா? ஜெயலலிதா, மத்திய அரசுடன் தொடர்புகொண்டு சில அ தி.மு.க. தலைவர்களையும் மாஜி மந்திரிகளையும் கைதுசெய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். எங்களை கைதுசெய்தால் மட்டும் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிடமுடியுமா? லட்சக்கணக்கான தொண்டர்கள் சேர்ந்து ஜானகியை ஆட்சியில் அமர்த்துவார்கள்.

—இப்படி முத்துச்சாமி சொன்னார். ★

## பெயர் சூட்டுவதிலும் போட்டி

தமிழ்நாட்டில் தேர்தல் ஜுரம் அடிக்கத் தொடங்கி விட்டது.

அத்துடன் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் படலமும் ஆரம்பித்து விட்டது.

முன்னர் தலைவர்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினர்கள் இப்போது அரசியல் வாதிகளாக மாறிய நடிகைகள் பெயர் சூட்டுகின்றார்கள்.

ஜெயலலிதாவும் ஜானகியும் குழந்தைகளுக்கு அண்மையில் சென்னையில் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

பிரசாத் ஸ்ருடியோ ராமராஜன் ரசிகர் கழகத் தலைவருக்கு பிறந்த ஆண் குழந்தையை ஜெயலலிதா முன் நீட்டப்பட்டது.

குழந்தைக்கு 'ராமச்சந்திரன்' என்று ஜெயலலிதா பெயர் சூட்டினர்.

ஜானகி கலந்து கொண்ட அதிமுக கூட்டத்தில், பெண்குழந்தை ஒன்றுக்குப் பெயர் சூட்டப்பட்டது.

ஜானகி அம்மாள் அப் பெண் குழந்தைக்கு 'சத்தியா' என்ற பெயரைச் சூட்டினர்.

ராமச்சந்திரன் - எம். ஜி. ஆரின் பெயர். சத்தியா - எம். ஜி. ஆரின் அம்மாவின் பெயர்.

## பூம்பூம் மாட்டுக்காரனும் புல்லாங்குழலும்!

"பூம்பூம் மாட்டுக்காரன் புல்லாங்குழலைப் பழிப்பதுபோல உள்ளது ஜெயலலிதா அணியினர் நடவடிக்கை" என்று மாஜி அமைச்சர் ப. உ. சண்முகம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ப.உ. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

நெடுஞ்செழியன் என்னவோ தான் மட்டும் தான் புடம் போட்டு எடுக்கப்பட்ட சொக்கத் தங்கம் என்றும் மற்றவர்கள் குற்றப் பரம்பரையினர் போலவும் பேசி வருகிறார்.

குற்றாலத்து அருவியை விடத் தூய்மையானது கூவம் என்பது போல் வரது பேச்சு உள்ளது. அவர் சென்றுள்ள இடம் தஞ்சம் புகுந்துள்ள இடத்தை குளிரச்செய்யும் முயற்சியை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனுல் அதற்காகச் சேற்றை வாரி பிறர்மீது வீசுவது நாவலருக்கு அழகல்ல.

விரக்தியில் நாவலர் சண்டத்தைப் பேசுகிறார் கூழைக்கூத்தாடி பரத நாட்டியத்தை பழிப்பது போல, நடனத்தைப் பழிப்பதுபோல, பூம்பூம் மாட்டுக்காரன் புல்லாங்குழலை கிண்டல் பண்ணுவதுபோல் இருக்கிறது. ஜெயலலிதா அணியினர் நடவடிக்கை நாவலருக்கு அதிகமாகக் கூற வேண்டாம் என்று நினைக்கிறேம். சுருங்கச் சொன்னுல் நாவலர் நாகாக்க வேண்டும்.

[illegible] ★

## ஜெயலலிதாவைப் பின்பற்ற 500 பேர் இரத்தக் கையெழுத்து

ஜெயலலிதா போடும் எந்த உத்தரவையும் ஏற்று அமுல்படுத்த தயார் என்றும், ஜெயலலிதாவின் லட்சியம் நிறைவேற உயிரைக் கொடுக்கவும் தயார் என்று கூறி இரத்தக்கையெழுத்திட்டு ஒரு மகஜரை அஇ - அதிமுக தொண்டர்கள் சுமார் 500 பேர் ஜெயலலிதாவிடம் அளித்துள்ளனர்.

தஞ்சாவூரில் ஜெயலலிதா ஆதரவாளர்களில் முக்கிய நபரான தம்பி மோகன் இந்த மகஜரை ஜெயலலிதாவிடம் அளித்தார்.

எம். ஜி. ராமச்சந்திரனைப் போலவே தம்மைக் காணவும், தமது பேச்சைக் கேட்கவும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூட்டம் வரும் என்று ஜெயலலிதா நிரூபித்தார்.

தஞ்சாவூரில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட 12க்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டிருந்தன. ஒவ்வொரு சாலை சந்திப்பிலும் நூற்றுக்கணக்கான மக்கள் ஜெயலலிதாவைக் காண கூடியிருந்தனர்.

திருவாரூரில் ஜெயலலிதா பேசிய திடலுக்கு சுமார் 25,000 பேர் வந்திருந்தனர்.

ஜெயலலிதா, மதுரையிலிருந்து காலையில் தஞ்சாவூர் வந்தார். பின், அவர் திருவாரூக்குச் செல்லும்போது வழியில் உள்ள கிராமங்களில் மக்கள் திரளாக நின்று அவரை வரவேற்றனர். ஏராளமான அலங்கார வளைவுகள் நிறுவப்பட்டிருந்தன.

"தமிழகத்தில் தர்மம் காக்க வந்த புரட்சித் தலைவியே வருக, வருக" என்று வரவேற்பு வளைவுகளில் எழுதப்பட்டிருந்தது.

ஏராளமான போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

பிரம்மாண்டமான அளவில் எம் ஜி ஆர்., ஜெயலலிதா கட் அவுட் உருவ பலகைகள் நிறுவப்பட்டிருந்தன.

### 150 கார்கள்

சுமார் 150 கார்கள் ஜெயலலிதாவின் காரைப்பின் தொடர்ந்து சென்றன. 4 கார்களில் சென்னையிலிருந்து நிருபர்கள் அழைத்து வரப்பட்டனர்.

ஜெயலலிதா, தஞ்சாவூர் திருவாரூர் இடையே பல இடங்களில் காரை நிறுத்தி இறங்கி அங்கிருந்த விவசாயிகளிடம் அவர்களது பிரச்சினைகள் பற்றிக் கேட்டார். ★


நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரு





நிதித்துறையில் உங்கள் நண்பன்

★ ஷப்ரு ★

யூனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

✶ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
✶ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
✶ லீ. பி. ஈ. கருணரடண, (சட்டத்தரணி)
✶ ஆர். பாலசுப்பிரமணியம்
✶ ஓ. சி. எம். ஹசன்பாரி, B.A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

# ஷப்ரு நிதி நிறுவனம்

61 நியூ புல்லர்ஸ் வீதி, [illegible] - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர்,- 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நீம் சுகாதார தூபம்

துளம்புத் தொல்லையை நீக்கி வீட்டுத் தூய்மையைத் தரவல்லது ''நீம் சுகாதார தூபம்''

ஒரு பைக்கற் விலை /50 சதம் மட்டுமே!

—மில்க்வைற், யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

05 - 03 - 1988 சனிக்கிழமை



## இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு

ஒலிப் ஸ்நானப்பவுடர் (சங்கு மார்க்)

தலைமயிரிலுள்ள அழுக்கு, பிசாண், சொடுகு என்பனவற்றைப் போக்கி தலைமயிர் அடர்த்தியாகவும், கருமையாகவும் வளர உதவுகின்றது.

ஒரு பைக்கற் —/50 சதம் மட்டுமே!

இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு.


### அன்பும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தில் மட்டுமன்றி, எல்லோரது நெஞ்சங்களிலும் அறம் வளர வேண்டும். அறம் வளர்வதற்கு மற்றவர்மேல் அன்பு வளர வேண்டும்.

அருளைற்றன் திருவள்ளுவர் -

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, பண்பும் பயனும் அது—என்றார்

இன்று திருவள்ளுவப் பெருமானின் குருபூசை. அறமும், அன்பும் சொன்னவை ஒன்றே என்று கருதி, அவ்வழி செல்வோமாக ★

### மாட்டு நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவேண்டும். அவர்களை அவர்களின் விருப்பமின்றி இந்தியாவுக்கு அனுப்பக்கூடாது.

அவசரகால மற்றும் அடக்குமுறைச் சட்டங்கள் நீக்கப்படவேண்டும். சகல தமிழ்த் தரப்பினருடனும் இந்திய அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும்

(அ-ஒ-எ)

### சம்சாரம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சப்பட்டது

இப்போது அவர் வைத்திய நிபுணர்களின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்று அறிவிக்கப்படுகின்றது. (ஆ-எ)

## யாழ்ப்பாணம் தபாலகத்தில் முத்திரைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ் பெரிய தபால் கந்தோருக்கு முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

அடுத்த வாரம் அளவில் வான் தபாலும் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏழுரூபா, ஐந்துரூபா, ஒருரூபா, எழுபத்தைந்து சதம் ஆகிய பெறுமதி உடைய முத்திரைகளே தற்பொழுது வந்து சேர்ந்துள்ளன (ஒ-10)


# RIETAS Enterprises

## A. பத்மதாஸ்

# பிரயாண ஒழுங்குகள்

● குவைத்

தையல் வேலையாட்கள் - (Tailors)

அதிக எண்ணிக்கையானோர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

● டுபாய்

தோட்டவேலையாட்கள் - (Farmers)

● சவூதி

கூலி - (Labourer) வேலை முதற்கொண்டு நிர்வாகப் பொறுப்பாளர் வரையிலான அனைத்து வேலைவாய்ப்புகளும்.

சகல விதமான பிரயாண ஒழுங்குகளும் எவ்வித தாமதமுமின்றி எமது புதிய முகவர் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

✶ முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

✶ குறிப்பிட்ட நாட்களுக்குள் பிரயாணத்திற்கான சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு எவ்வித தாமதமுமின்றி எமது காரியாலயத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம்

காரியாலய நேரம்: காலை 8 மணி முதல் 4 மணி வரை

கடித மூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய கடித உறையுடன் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்

இவ்வாரம் பிரயாணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

| உபமுகவர்: | உபமுகவர்: |
|---|---|
| V. விஜயகுமார் | A அன்ரனி |
| ஊறணி, | தாளையடி, |
| வல்வெட்டித்துறை. | |

தலைமை அலுவலகம்:

## A. பத்மதாஸ்

இல, 97, பருத்தித்துறை வீதி,

கல்வியங்காடு-


## நீத்தார் பட்டியல்

### றிஜ்வே

04-03-88 வெள்ளிக்கிழமை றிஜ்வே காலமாகிவிட்டார். முன்னை நாள் ஊர்காவற்றுறை பட்டினசபை, தீவுப் குதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும், காலம் சென்ற றோசம்மா அந்தோனியாப்பிள்ளையின் கணவரும், செல்வம் றொனடிக்ற் (கனடா), புனிதம் இராஜதுரை (மலேசியா), லியோ பிரான்சிஸ் (திருகோணமலை), நவம் வலோறன்ஸ் (பெல்ஜியம்), ஜெயா கிறிஸ்ரின் (இந்தியா), பேபி விக்ரர், காலம் சென்ற இன்பம் அக்னேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், றொனடிக்ற், காலம் சென்ற இராஜதுரை, றிக், ஜோண் விக்ரர், பேபி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் 6-3-88 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

| | |
|---|---|
| தகவல்: | செபஸ்தியார் கோவிலடி, |
| B. அஞ்சலோ | கரம்பொன் தெற்கு, |
| வசந்தா ஸ்ரோஸ். | ஊர்காவற்றுறை. |

# ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | — | இறைவனடியில் |
|---|---|---|
| 26 - 04 - 1927 | | 16 02 - 1987 |

திதி — 6 - 3 - 1988

## அமரர் உயர் திரு. வாதவூர் அருணகிரி

[அகில இலங்கை சமாதான நீதிவான் J. P]
[அருணா பீடிக் கொம்பனி உரிமையாளர்]

ஓராண்டு காலமது உருண்டோடி விட்டாலும் அருகிருந்து போன்று அன்பார்ந்த உள்ளங்களில் மாறாத அன்பதனை நிலைத்துவிட்ட உங்களது பாதார விந்தத்தில் எமதஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நாளை [6 - 3 - 88] அன்னாரது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆண்டுத்திவசக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உறவினர் அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்

''அருணோதயம்''
வேலணை - 6
வேலணை.

(1629)

## "ஆதவன்" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ் வெளிவாரிப்பட்டதாரி மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் முத்திங்கள் ஏடான "ஆதவன்" வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆனைப்பந்தியில் உள்ள உயர் கல்லூரியில் நடைபெறும். (ஒ-9)


# தொழிற் பயிற்சி

உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் இலகுவாக தொழில்வாய்ப்பு பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

● Computer Programming in Basic Language-RadioShack, B.B.C, Laser Computer களில் 60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

● Computer Programming in Cobol Language Radio shack Computer இல் 6 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 1000/-
Basic Language படித்தவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

● றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்
சகல வித றேடியோ, ரெலிவிஷன் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-
வீடியோ டெக் றிப்பியறிங்
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம் 750/-

● எலக்றிக்கல் வயறிங்
வீட்டுமின்சார வேலை, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 500-

● றீவைண்டிங்
ராண்ஸ்போமர் மின்விசிறி, மோட்டார் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம் 1000 -

● எலக்றிக்கல் வெல்டிங்
இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 750/-

● DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 750/-

● மோட்டார் மெக்கானிசம்
பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:
09-03-88 [கிழமை நாட்கள்]
12 03-88 (சனி, ஞாயிறு)

விபரங்களுக்கு:

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை]
யாழ்ப்பாணம்



## எமது நேற்றைய புதிய வெளியீடு!

சரண்ராஜ் — ராதிகா — செந்தில்
நிழல்கள் ரவி — செந்தாமரை
ரவிச்சந்திரன்

நடித்த

## "சுதந்திர நாட்டின் அடிமைகள்"

எம்மிடம்

வீடியோ கசெற்றுக்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

தரமான பிரதிகளுக்கு என்றும்

# குணம்

## வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665


## முதலாம் ஆண்டு நினைவும் அழைப்பும்



திருமதி செல்லத்துரை சின்னப்பிள்ளை

சட்டுவன் - தெல்லிப்பளை

எமது அன்பு அன்னையின் முதலாண்டுத் திவசம் நாளை (6- 3- 88) எனது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உறவினர் நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

| | |
|---|---|
| 55/4 வைமன் வீதி, | செ, கனகரத்தினம் |
| நல்லூர் - யாழ்ப்பாணம் | (குடும்பத்தினர் பிள்ளைகள்) |

## ★ அவரா இவர்?

அத்துருகிரிய இராணுவ முகாமில் எட்டுச் சிப்பாய்களைச் சுட்டுக் கொன்ற சிப்பாய், ஐ. தே. க. தலைவர் ஹர்ஷா அபயவர்த்தனா விஜேகுமாரணதுங்கா, ஆகியோர் கொலையுண்ட தினங்களில் [illegible] சென் [illegible] என்பது கண்டு பிடிக்கப்பட்டது

இதனிடையில் சிப்பாய் ரஞ்சித்தின் சூட்கேஸினுள் விலாசமிடப்பட்ட ஒன்பது கடித உறைகளைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

உறைகளினுள் கடிதங்கள் எவையும் இருக்கவில்லை.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



முதலியார்

### வை. மகேசன் J. P.

தோற்றம்: 12-9-1909 மறைவு: 5-3-1986

தங்கள் பிரிவால் துயருறும்,
என்றும் அன்பு மறவாத
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

'லிங்கவாசா'
நவாலி.
5-3-88


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05 03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthavan Publications (Pvt) Ltd. [illegible] Navalar Road Jaffna on Saturday. 5th March 1988.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org